HNB GRAMEEN

# மெஹெவர

இருள் நீக்கும் உன்னத பணி

4 ஆம் தொகுதி - மூன்றாவது இதழ் - 2015 நவம்பர்










## உள்ளூர் நுண்நிதி நிறுவன கிரிக்கட் போட்டிகளில்

# எச்.என்.பி.கிராமின் நிறுவனத்துக்கு உலோக கிண்ணம்

இலங்கையின் நுண்நிதி சேவைகளை வழங்கி வரும் நிறுவன சங்கங்களுக்கிடையில் முதற் தடவையாக ஒழுங்கு செய்யப்பட்ட கிரிக்கட் போட்டி 2015 ஒக்டோபர் மாதம் 10ஆம் திகதி கொழும்பு 05, சாலிகா மைதானத்தில் வெகு விமர்சையாக நடைபெற்றது.

இலங்கை நுண்நிதி சேவை வழங்கும் நிறுவன சங்கத்தில் அங்கத்தவர்களாக பதிவு செய்யப்பட்ட 25 நிறுவனங்கள் இந்தப் போட்டியில் கலந்துகொண்டதுடன் எச்.என்.பி.கிராமின் நிறுவனம் நிறுவனத்தின் சகல அங்கத்தவர்களையும் இணைத்துக் கொண்ட ஓர் அணியாகவும் புத்தளம் கிளை அங்கத்தவர்களைக் கொண்டு மற்றுமொரு அணியாகவும் இந்தப் போட்டியில் கலந்து கொண்டது. “உலோக கிண்ண”த்துக்கான போட்டியில் எச்.என்.பி. நிறுவன ஒன்றிணைந்த அணியும் விசன் பண்ட் நிறுவனமும் மோதிக்கொண்டதுடன் எச்.என்.பி. கிராமின் ஒன்றிணைந்த அணி “உலோக கிண்ணத்தை” சுவீகரித்துக் கொண்டது.




# வாழ்க்கையின் அர்த்தம்

## உலகை வென்ற பாடகரான முன்மாதிரியாளர்

**மிகச் சிறந்த மனிதராக நீங்கள் மாற வேண்டுமாக இருந்தால் முயற்சி, வாய்ப்புகள் மற்றும் திறமையை வெளிப்பாடுத்த தயக்கம் காட்ட வேண்டாம். அவற்றை படிப்படியாக செய்வதற்கு முயற்சி செய்யவும். இதன் மூலம் வாழ்க்கையில் உயர் நிலைக்கு செல்ல முடியுமென்பது கண்கூடு.**


மனிதனது வாழ்க்கையில் பல விடயங்கள் தொடர்பில் எதிர்பார்க்கப்படுகின்ற போதிலும் ஒரு சில விடயங்களே யாதார்த்தமாகின்றன. நிறைவேற்ற முடியாத விடயங்கள் உங்கள் வாழ்க்கையில் கனவாகவே இருந்து கொண்டிருக்கும். அந்தக் கனவை நனவாக்குவதற்கு தியாகங்களை செய்ய வேண்டும். அவ்வாறே பல்வேறு சவால்களுக்கும் முகம் கொடுக்க வேண்டியேற்படும். நீங்கள் விரும்பும், ஆசைப்படும் ஒன்று விற்பனைக்காக இருந்தால் அதனை விலைக்கு வாங்க முடியும். நகைகள், உடைகள், காணி, வாகனம் ஆகியவற்றை விலைக்கு வாங்க முடியும். அவ்வாறே தேவையான போது அதனை விற்பனை செய்ய முடியும். சில பொருட்களுக்கு விலை மதிப்பே இல்லை. அன்பு, கருணை, பாசம், கனவு, தொடர்புகள், மகிழ்ச்சி, உண்மையான நட்பு ஆகியவற்றை விலை கொடுத்து வாங்க முடியாது. மேற்கூறிய இரண்டும் மனித வாழ்க்கையின் வெற்றிக்கு மிகவும் இன்றிமையாத விடயங்களாக காணப்படுகின்றன.

உங்களிடம் எந்தளவு திறமை மற்றும் முயற்சி காணப்பட்டாலும் அந்தத் திறமையையும், முயற்சியையும் அவதானித்து உங்களை சரியான இடத்துக்கு கொண்டு செல்வதற்கு யாரேனும் ஒருவர் உங்களை ஊக்குவிக்க வேண்டும். அவ்விதம் ஊக்குவித்தால் அல்லது அந்த இடத்துக்கு கொண்டு செல்லாவிட்டால் திறமையாளர்களுக்கு ஒரு நாளும் தனது திறமையை வெளிப்படுத்த முடியாமல் போகும். நீங்களும் உங்களைப் பற்றி சிந்தித்துப் பாருங்கள். நீங்கள் திறமையானவராக இருந்தால் உங்கள் திறமை வெளி உலகுக்கு தெரியாமல் இருக்க முடியாது. உலகம் உங்களைப் பற்றி அறிந்து கொள்ளும் போது திறமைக்கேற்ற ஒன்றை உங்களுக்கு பெற்றுக் கொடுக்கும். உங்களின் திறமைக்கேற்ற பெறுமதியை பலவந்தமாக பெறத் தேவையில்லை. உலகம் உங்கள் திறமைக்கு சன்மானம் வழங்கும்.

இந்தியாவின் மிக நீண்ட தூர கிராமமொன்றில் கல்வி செயற்பாடுகளில் மிகவும் பின்தங்கிய நிலையில் பிறந்த இளைஞர் மொஹமட் என்பவராகும். இவருடைய தொழில் முடிவெட்டுவதாகும். (சலூன் கைத்தொழிலாகும்) மற்றவர்களுக்கு தலைமயிர் வெட்டுவதை இழிவாக கருதாமல் மற்றவர்களை திருப்திபடுத்தும் வகையில் தனது சேவையை செய்து வந்தார். அவருடைய பழக்கவழக்கங்களில் ஒன்றான தலைமயிர் வெட்டும் போது மென்மையான குரலில் பாடல்களை முணுமுணுத்துக் கொண்டிருப்பது விசேட அம்சமாகும். இதன் மூலம் ஆனந்தமாக தமது தொழிலை நடத்தக் கூடியதாக இருந்ததுடன் வாடிக்கையாளர்களும் அந்த இசைக்கு ஈர்க்கப்பட்டார்கள். இவருடைய பாடல்களினால் கவரப்பட்ட வாடிக்கையாளர்கள் அவரை நோக்கி நாளாந்தம் வருகை தந்தார்கள். வழமைக்கு மாற்றமாக ஒரு நாள் புதிய வாடிக்கையாளர் ஒருவர் தலைமயிர் வெட்டுவதற்காக வருகை தந்தார். தமது நாளாந்த செயற்பாடுகளில் எவ்வித மாற்றமும் செய்யாத மொஹமட், பாடலை பாடிக்கொண்டு அவருடைய தலைமயிரை வெட்டினார். தலைமயிர் வெட்டிய பின்னர் வாடிக்கையாளர் ஒரு சில நிமிடம் மொஹமட்டிடம் அலவளானார். தான் இந்தியாவின் பிரபல்யமான வானொலியொன்றின் தலைவர் என்று மொஹமட்டிடம் அறிமுகம் செய்ததுடன் அவருடைய இனிமையான குரலைக் கேட்டு தாம் மிகழ்ச்சியடைந்ததாகவும் கூறியுள்ளார். தன்னுடைய புதிய வாடிக்கையாளர் அவசர வேலை நிமித்தமாக செல்ல வேண்டியிருப்பதால் தான் வழங்கும் விலாசத்துக்கு வந்து தன்னை சந்திக்குமாறு மொஹமட்டிடம் கூறிவிட்டு சென்றார். கிடைத்த சந்தர்ப்பத்தை நழுவ விடாத மொஹமட், மறுகணமே ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்துக்கு சென்று தனது புதிய வாடிக்கையாளரை சந்தித்தார். அங்கு அவரது குரல் பரிசீலனைக்கு உட்படுத்தப்பட்டது. அந்தப் பரீட்சையின் போது அவருடைய குரல் மிகவும் இனிமையாக இருந்தது. அந்தச் செய்தி அவருக்கும் அவருடைய குடும்பத்தினருக்கும் மகிழ்ச்சிகரமான விடயமாக அமைந்தது. அந்த மகிழ்ச்சிகரமான செய்தி அவருடைய வாழ்க்கையை வேறு வழியில் செல்வதற்கு அடிதளமாக அமைந்தது. அதாவது வானொலியில் பாடல் பாடுவதற்கு சந்தர்ப்பம் கிடைத்தது. சில காலங்களில் மொஹமட் பிரல்பயமான பாடகராக மாறினார். அவர் பாடிய பாடல்கள் மக்கள் மத்தியில் மிகவும் பிரபல்யமடைந்தது. இறுதியில் இந்தியாவில் மாத்திரமன்றி முழு உலகிலும் பிரபல்யமான பாடகராக மாறினார். இன்று அவர் எம்மில் இருந்து பிரிந்து சென்றாலும் அவர் பாடிய பாடல்கள் மூலம் எதிர்கால சந்ததியினரின் நெஞ்சம் மறக்காத மனிதராக வாழ்ந்து வருகிறார். அவர்தான் உலகப் புகழ்பெற்ற பாடகர் மொஹமட் ராபியாகும். மொஹமட் என்ற பெயர் எமக்கு தெரியாமல் இருந்தாலும் மொஹமட் ராபி என்ற பெயர் உலகமறிந்த பெயராகும். இந்த உலகப் புகழ்பெற்ற மொஹமட் ராபியின் மென்மையான பாடல்கள் இன்றும் மனதை உருக்கும் பாடல்களாக காணப்படுகின்றன.




இவ்விதம் அவர் தனது வாழ்வை மாற்றி வேறு வழியில் சென்றமைக்கு அவருடைய திறமையும் தான் தொழிலை செய்யும் போதே மற்றவர்களினால் தனது குரல் வளம் பேசப்படும் அளவுக்கு பாடல்களில் கொண்ட விருப்பமும் காரணமாகும். நீங்களும் இந்த வினாடியில் இருந்து இன்றிலிருந்து உங்கள் திறமை எதுவென அறிந்து கொள்ளுங்கள். அந்த திறமையை பிற்படுத்தாமல் உங்கள் வாழ்க்கையில் பயன்படுத்த முயற்சி செய்யுங்கள். உங்கள் திறமையை மற்றவர்கள் அறிந்து கொள்வது நிச்சயமாகும். அந்த திறமையை மேலும் வளர்த்து நீங்கள் உங்கள் வாழ்க்கை செழிப்பான ஒன்றாக மாற்றிக் கொள்ள முடியும். இந்த வினாடியில் இருந்தே உங்கள் வாழ்க்கையை மாற்றி புதிய வாழ்க்கைக்கான இலக்கொன்றுக்கான பயணத்தை திட்டமிடுங்கள். நடைமுறைப்படுத்துங்கள். களநிலையை ஆய்வு செய்யுங்கள். அதன் மூலம் வளமான வாழ்வுக்கு அடித்தளமிடுங்கள். இறுதியில் அதன் பெறுபேறு உங்கள் குடும்பத்துக்கும், கிராமத்துக்கும், நாட்டுக்கும், உலகிற்கும் நன்மை கிடைப்பது நிச்சயமாகும். இந்த வினாடியில் இருந்தே நீங்கள் திறமை, முயற்சி, மகிழ்ச்சியை அறிந்து கொள்ளுங்கள். அவற்றை தொடர்ந்து பயிற்சி செய்து வாருங்கள்.



**பிரேமசிறி கமகே**
**தலைவர், கைத்தொழில் அபிவிருத்தி மத்திய நிலையம்**

**எமது எண்ணங்களுக்கு ஏற்பவே செயல்களின் தன்மை மாற்றமடைகிறது.**



# நோக்கு

## நாம் ஒன்றிணைந்து எழுவோம்

எச்.என்.பி.கிராமின் நிறுவனத்தின் தனது பயணத்தின் 15 வருடத்தை நிறைவு செய்துள்ளது. வாழ்க்கை குறித்து எண்ணிப் பார்க்கும் போது 15 வருடம் என்பது புதிய இளைஞர் சமூகத்தின் ஆரம்ப காலப்பகுதி புதிய அனுபவங்களுக்கும் இளமைத் துடிப்புக்கும் அனுபவங்களை பகிர்ந்து கொள்ளுவதற்குமான ஆரம்ப கட்டமாகும். தவழ்ந்து முழந்தாலிட்டும் விழுந்து விழுந்து எழுந்து நிற்கும் ஆரம்ப வாழ்க்கைப் படிகளில் கிராமின் என்ற நாங்கள் கடந்த 15 வருட காலமாக நிறைய நெருக்கடிகளையும், முயற்சிகளையும் முன்னெடுத்து எழுந்து நிற்பதற்காக முயற்சிகளை மேற்கொண்டு வருகிறோம். பல்வேறு நெருக்கடிகள் மோதல்கள் தடைகளை எதிர்கொண்டு சளைக்காமல் இலக்கு நேக்கி பயணிக்கும் ஓர் உன்ன பயணத்தை ஆரம்பித்துள்ளோம்.

இன்று உதயமாகியிருக்கும் நாம் எதிர்கொண்ட துயரங்கள், பிரதிபலன்களை அனுபவிக்கும் காலகட்டத்தில் வெற்றிப் பாதையை நோக்கி வந்திருக்கிறோம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றோம். கிராமிய இளைஞர்கள் எச்.என்.பி.கிராமின் என்ற பெயரில் முடிசூடும் 2011ஆம் ஆண்டில் நாம் ஆரம்பித்த பயணத்தின் ஒரு சந்தோஷமான வெற்றி இலக்கை அடைந்திருப்பதாகவே நான் நினைக்கிறேன்.

2011ஆம் ஆண்டில் பிரைம் கிராமின் என்ற பெயரில் நாம் இந்த நிறுவனத்தை புதிய பாதைக்கு பயணிக்கச் செய்த போது நாம் இழந்த இழப்புகள் மூன்று பில்லியன் தசன் நான்கு (3.4) நான்கு வருட காலத்திற்குள் நாம் இந்த நட்டத்தை இலாபத்தின் பக்கம் திருப்புவதற்கான முயற்சிகளை செய்தோம். இது ஒரு கரடு முரடான பயணமாகும். அது எமது அலுவலகத்தினர் ஒரு போதும் கண்டிராத இலாபங்களை அனுபவிப்பதற்கான சந்தர்ப்பங்களையும் ஒன்றன் பின்ன ஒன்றாக பெற்றுக் கொடுக்கும் நிலையிலேயே இந்தப் பயணத்தை முன்னெடுத்து வந்துள்ளோம்.

மத்திய நிலையங்களின் எண்ணிக்கை நாளாந்தம் அதிகரித்து வருவதால் கிளைகளில் அங்கத்தவர் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது. எமது சிறப்பான சேவையை தொடர்ந்து தக்க வைத்துக் கொள்ள இது மிகவும் பயனுடையதாகும். பெற்றுக் கொண்ட வெற்றியை மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொண்டு நாம் முன்வைத்த அடியை மெதுவாக முன்னெடுத்தால் அது நிரந்தரமான மகிழ்ச்சியாக மாறிவிடும்.

நிதித்துறையில் புதிய மாற்றங்களை அறிந்து கொள்வதுடன் அவற்றை நாம் எவ்விதம் பெற்றுக் கொள்வது என்பது தொடர்பாக சிந்திக்க வேண்டியுள்ளது.

எனினும், புதிய தொழில்நுட்பங்களுடன் நவீன சேவைகள் பலவற்றை இந்த நான்காண்டுகளாக வாடிக்கையாளருக்கு திருப்திகரமாக வழங்கி வருகிறோம்.

இதற்காக எமது அலுவலக பணியாளர்களின் ஒப்பற்ற சேவை மற்றும் விட்டுக்கொடுப்பு அளப்பரியது. அத்துடன் எம்மீது கொண்டுள்ள நம்பிக்கை தொடர்பில் நான் மனப்பூர்வமான இந்த சந்தர்ப்பத்தில் ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

உங்களுக்கு தெரியாத . . . இந்த கூட்டு முயற்சி பற்றி தெரியாவிட்டால் இந்தளவு குறுகிய காலத்தில் எமது நிறுவனம் பெற்றுள்ள பாரிய வெற்றியானது எவராலும் பெற முடியாத ஒன்று என்பது எனது வலுவான நம்பிக்கையாகும்.

இதற்கான மீண்டும் மீண்டும் உங்களுக்கு நன்றியைத் தெரிவிக்கிறேன்.

இதுவரை காலமும் நாம் நட்டத்தில் இயங்கிக் கொண்டிருந்த போதும் 2015ஆம் ஆண்டில் ஒரு பில்லியன் இலாபத்தை அடைந்துக் கொள்ளக் கூடியமை நாம் பெற்ற பாரிய வெற்றியாகவும் மைல்கல்லாகவும் பார்க்கிறோம். இவ்வளவு காலமும் RAM Rating B தரத்தில் இருந்த நாம் இந்த வருடத்தில் நிதி நிறுவன செயற்பாடுகளை அளவீடு செய்யும் பிரதான நிறுவனமான Fitch Rating நிறுவனத்தினால் Fitch Rating "A (lka) Stable" பெறுமானத்தைப் பெற்றுக் கொள்ள முடிந்தமை அபூர்வமான விடயமாகும்.

நிறுவனமாக இருந்தாலும் தனிப்பட்ட வாழ்க்கையாக இருந்தாலும் படிப்படியாக முன்னேற்றமடைய வேண்டும். நீங்கள், உங்களுக்கே உரித்தான வீட்டின் உரிமையாளராக மாற வேண்டும். தமக்கென்று சொந்தமான வாகனத்தை வைத்துக் கொள்ள வேண்டும். வாழ்க்கையின் இன்ப துன்பங்களை தெரிந்து கொள்ள வேண்டியதுடன் அதனை யதார்த்தமாக மாற்றி வெற்றி பெறுவதற்கு முயற்சி செய்ய வேண்டும். எமது ஊழியர்கள் புதிய வீடுகள் அமைத்து, தமது வாழ்க்கையை உயர்நிலைக்கு கொண்டு செல்வதற்கு மேற்கொள்ளப்படும் முயற்சிகள் தொடர்பில் நான் மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறேன். உங்கள் வாழ்க்கையைப் போன்று எமது நிறுவனமும் இன்று இலாபமடைந்த நிறுவனமாக மாறினால் அதன் பங்காளர்கள் உங்கள் மனைவி, பிள்ளைகளுமாகும். அதற்காக இரவு பகல பாராது நீங்கள் நிறுவனத்துக்காக அர்ப்பணிப்புடன் சேவையாற்றும் போது அந்த அர்ப்பணிப்பின் பின்னால் உங்கள் வளர்ச்சிக்கு தூண்டிய அந்த சக்தி அவர்கள் என்றால் அது மிகையாகாது. அவர்களுக்கும் இந்தச் சந்தர்ப்பத்தில் எனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

"நவீன கண்ணோட்டத்தில் உலகை அவதானித்து எம்முடன் ஒன்றிணைந்து கொள்வோம்" நான் உங்களை சந்திக்கும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் தெரிவிக்கும் வார்த்தையாகும். தனது பதினைந்தாவது வருடத்தில் கால்பதித்திருக்கும் எச்.என்.பி.கிராமின் இளைஞர்கள் இன்று கிடைப்பதை விட வளமான எதிர்காலத்துக்காக வெற்றிகள் பலவற்றை விரைவில் பெற வேண்டுமென்ற எண்ணத்தில் இன்றைய நிகழ்வில் கலந்து கொண்ட உங்களுக்கு சாதனைகள் புரிய காத்திருக்கிறீர்கள் என்பதை நீங்கள் மௌமாக செவியுற்றிருக்கும் போது எமக்கு புலனாகிறது. அந்த வெற்றிக்கு உண்மையான உரிமையாளர்கள் நாம் அனைவருமாகும். இதற்கு பாரிய தியாகங்களை செய்ய வேண்டியுள்ளது. முயற்சி மற்றும் உறுதியும் . . . அதனை நிறைவேற்றுவதற்காகவும் அந்த இலக்கை அடைந்து கொள்வதற்காகவும் பொறுப்புடன் செயற்பட்டு இலங்கையின் முன்னணி நிதி நிறுவனமாக எமது மாற்றியமைக்க நீங்கள் அனைவரும் முன்வர வேண்டும். பூ பறிப்பதற்கான காலம் வெகு தூரத்தில் இல்லை. உங்களுக்கு வெற்றி . . .

சமிந்த பிரபாத்
முகாமைத்துவ பணிப்பாளர்

# கவிதைச் சாளரம்

## பூக்கள்

தாமரை மலரோ உதயகாலத்தில் மலரும்..!
செண்பக மலரோ காலையில் மலரும்..!
பவழ மல்லிகையோ மாலையில் மலரும்..!
மயக்கும் மல்லிகையோ இரவினில் மலரும்..!
அழகினிய அல்லியோ நிலவின் உறவினில் மலரும்..!
என் இதய மலரோ உனை நினைத்ததுமே மலருமடி!

---

பூக்களின் இதழ்களைத்
தொட்டுப் பார்க்கையில்
எங்கிருந்து தான் ஆர்ப்பரித்து
வருமோ உன் வாசம்...
மொட்டாய் முடங்கியபோதே
விரியக்கூடாதென்று
பாதுகாப்பாய் இருந்தேன்...
விரிந்தபின் வாடக் கூடாதென்று
வீம்பாய் இருந்தேன்...
இப்போது நீ என்னை
மறந்துவிட்டாயா...!!!





## காலம்

என் கைக்கடிகாரத்தைப் பார்த்தேன்
மணி 9.40 எனக் காட்டியது
மீண்டும் பார்த்தேன்
மூன்று முட்கள் தெரிந்தது..

மீண்டும் ஒரு முறை பார்த்தேன்
காலம் கரைவதாய் தெரிந்தது...
காலத்தை கையில்
கட்டிப் போட்டதாய் தெரிந்தது...

நான் கட்டியிருந்த கடிகாரமும்
ஓடிக் கொண்டே இருந்தது...
மீண்டும் ஒரு முறை பார்க்க
நினைத்தபோது "சாப்பாடு ஆறுது
எவ்வளவு நேரம் காத்திருப்பது" என்று
அம்மா அழைத்தது காதில் விழுந்தது

அப்போதுதான் புரிந்தது காலம்
நகர்வது கைக்கடிகாரத்தில் மட்டும்
இல்லை என்பது...

கே.எல்.எராஜ் -
பிரதேச முகாமையாளர்

## அவள்...

அந்தக் கல்லறையில் பொறிக்கப்பட்டவை
வெறும் வார்த்தைகள் தான் - ஆனால்,
அவனுக்கு அந்தக் கல்லறை
வாசகங்கள் தான் வாழ்க்கை

முப்பது வயதுக்குள் மூப்பு வந்து அவன்
முகத்தில் ஆயிரம் சுருக்கம்
அந்த சுருக்கத்தின் மடிப்புகளில்
அவனது உடைந்து போன காதலின்
உருக்கமான நினைவுகள் உறங்குகின்றன

அவன் காதலி இறந்து போனாள்
ஆனால், இன்னும் அவன் காதல் வாழ்கிறது
காதல் சிலருக்கு வார்த்தை, இன்னும் சிலருக்கு
அதுவே வாழ்க்கை, அவனுக்கும்
காதலே வாழ்க்கையாகிப் போனது

டி.எச்.டி.பீ. ஜயமாலி,
முவகம மத்திய நிலையம்



அக்கரை மாட்டுக்கு இக்கரை பச்சையாகும்.




# HNBகிராமின் கிளையின் செயற்பாடுகள்

## நாட்டில் புதிய சுயதொழில் முயற்சிகளை ஆரம்பித்து பொருளாதார அபிவிருத்திக்கு வலுசேர்ப்பதே எமது நோக்கமாகும்...

### HNB கிராமின் வெலிமடை கிளை

நுவரெலியாவில் பதுளை வீதிக்கு திரும்பி நாம் ஹக்கலையை அண்மித்த போது, இவ்வளவு நேரமும் வானக் குமுறுல்களுடன் மண்ணை நனைத்துக் கொண்டிருந்த மழை திடீரென அதிகரிக்க தொடங்கியதுடன் கருவானமாக மாறி மேகக் கூட்டங்களுக்கு மத்தியில் மழைத்துளி எங்கள் மேனியில் படத் துவங்கியது. “நான் ஹக்கலைக்கு வருகிறேன். நாங்கள் வரும் வழியில் ஹக்கலை தோட்டத்தில் லீக்ஸ் பயிர்ச்செய்கையில் ஈடுபடும் எமது அங்கத்தவரின் வியாபாரத்தையும் பார்த்துக் கொள்ள முடியும்” . . . இடைவிடாமல் பெய்து வரும் மழை திடீரென நுவரெலியாவில் அதிகரிக்க ஆரம்பித்த அந்த சந்தர்ப்பத்தில் வெலிமடை கிளை முகாமையாளர் ரோஹன அபேசேகர அவர்கள் எம்மிடம் இதற்கு முன்னர் தொலைபேசியில் பேசியதற்கு அமைய எங்களின் திட்டத்தை மாற்றியமைத்து விட்டாரா என்ற சந்தேகம் எம்மத்தியில் தோன்றியது. எங்களுடைய மனதில் ஏற்பட்ட சந்தேகம் களைவதற்கு அவ்வளவு நேரம் எடுக்கவில்லை. “. . . நான் வந்து விட்டேன். நீங்கள் ஹக்கலை கடைத்தெருவை தாண்டி சற்று முன்னாள் வரவும் . . .” ரோஹன தொலைபேசியில் கூறினார். அவர் எமக்கு அளித்த வாக்குறுதிக்கு பதிலளிக்க முடியாத அளவுக்கு அங்கு மழை கடுமையாக இருந்தது.

வெலிமடையில் இருந்து பஸ்ஸில் ஏறி ஹக்கலைக்கு வருகை தந்த ரோஹன, அவருடைய சிறிய குடையினால் தாக்குபிடிக்க முடியாத அளவுக்கு கடும் மழைக்கு மத்தியில் நனைந்தவாறு எமது வாகனத்தில் ஏறினார்.

வெயில், மழை, கறுமேகம், இரவு, பகல் பாராது கிராமின் திட்டத்துக்கு ஏற்ப தமது வாடிக்கையாளர்களுக்கு சேவை வழங்குவதே எமது நோக்கமாகும். இதன் மூலம் எமது வாடிக்கையாளர்கள் திருப்திபடுத்த வேண்டுமென்பதாகும். இது வெலிமடை கிளை முகாமையாளரின் கருத்தாக காணப்பட்டது. வெலிமடை கிளையின் செயற்பாடுகளை “மெஹெவர” ஊடாக உங்களுக்கு தெரிவிப்பதே எமது பிரதான நோக்கமாகும்.

எச்.என்.பி.கிராமின் வெலிமடை கிளை வாடிக்கையாளர் களுக்கு கிளையில் வழங்கப்படும் சேவைகளையும் பல்வேறு இடர்பாடுகளுக்கு மத்தியில் கிராமின் நோக்கத்தை நடைமுறைப்படுத்துவதற்கு வெலிமடை கிளை ஆற்றிவரும் பங்களிப்பினையும் இவ்வார இதழில் எடுத்துரைக்க நாம் எதிர்பார்த்துள்ளோம்.

எச்.என்.பி.கிராமின் நிறுவனத்தின் வெலிமடை கிளையானது ஆயிரக்கணக்கான பெண்களின் வாழ்வில் முன்னேற்றத்தை ஏற்படுத்தி வளமான வாழ்க்கைக்கு அடிதளமிட்டது என்றால் அது மிகையாகாது.

கிராமின் நோக்கத்தினை முன்னெடுத்துச் செல்லும் வெலிமடை கிளையின் முகாமையாளர் ரோஹன அபேசேகர அவர்கள் தனது கிளை தொடர்பில் தெரிவித்த கருத்துக்கள் பின்வருமாறு. . .

வெலிமடை பிரதேசமானது பல்வேறு கைத்தொழில்களின் கேந்திர நிலையம் என்று கூற முடியாது. விவசாயத்துடன் தொடர்புடைய மரக்கறி செய்கைகளுக்கும் சம்பிரதாயபூர்வமாக ஈடுபட்டு வரும் கைத்தொழில்களுக்கும் பிரசித்தி பெற்ற இடமாகும். விசேடமாக மரக்கறி உற்பத்தி, பூஞ்செடிகள், சிறிய சுயதொழில் முயற்சிகள் என்பன இப்பிரதேச மக்களின் வாழ்வாதார மார்க்கங்களாக காணப்படுகின்றன.

இப்பிரதேச மக்களின் வாழ்வதாரத்தை மேம்படுத்தி அவர்களின் சுய தொழில் முயற்சிகளை விருத்தி செய்வதற்கான நிதி உதவிகளை வழங்க வேண்டுமென்ற உன்னத நோக்கத்தில் வெலிமடை கிளை 2003ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் ஆரம்பிக்கப்பட்டது.



எச்.என்.பி.கிராமின் வெலிமடை கிளை உத்தியோகத்தர்கள்

இக்கிளையானது எச்.என்.பி.கிளை வலையமைப்பில் 22 கிளையாக செயற்பட்டு வருகின்றது.

அவ்வாறே எமது மத்திய நிலையங்கள் பிரதேசமெங்கும் பரந்து காணப்படுகின்றன. எண்ணிக்கையில் குறிப்பிடுவதாயின் 165 மத்திய நிலையங்கள் வெலிமடை கிளையின் ஊடாக செயற்படுத்தப்பட்டு வருகின்றன. இந்த மத்திய நிலையங்கள் ஊடாக எமது அங்கத்தவர்களின் கைத்தொழிலை மேம்படுத்தவும் புதிதாக கைத்தொழில்களை ஆரம்பிப்பதற்கு தேவையான நிதி உதவிகளையும் ஆலோசனைகளையும் வழங்கி வருகின்றோம்.

இன்று வரை எமது கிளையில் 4688 அங்கத்தவர்களுக்கு கடன் வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. எமது மத்திய நிலையங்கள் பரந்து காணப்படும் பிரதேசங்களான வெலிமடையில் இருந்து பண்டாரவளை அண்மித்த பகுதி வரையும் எதிர் பக்கத்தில் பதுளை வீதியில் எட்டம்பிட்டி வரையும், நுவரெலிய வீதியில் ஹக்கலை வரையும், ஹப்புத்தளை வீதியில் ஹல்துமுல்லை வரையும் ஊவா பரணகம பிரதேசத்தில் உடபுசல்லாவை வரையும் 165 மத்திய நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளன. இந்த மத்திய நிலையங்கள் ஊடாக அந்தப் பிரதேசத்தில் கைத்தொழிலில் ஈடுபடுபவர்களுக்கு எமது நிறுவனத்தில் அங்கத்தவர்களாக இணைந்து கொள்பவர்க ளுக்கு கடன் வசதிகளை வழங்கி உள்ளோம். அங்கத்தவர் களின் நாளாந்த செலவு களை ஈடு செய்யும் வகையில் உடனடியாக வழங்கப் படும் “இலகு கடன்” திட்டத்தின் கீழ் 70 மில்லியன் ரூபா கடனையும், அங்கத்தவர்களின் குடும்ப உறுப்பினர்களுக்கு கடன் பாதுகாப்பு நிதியத்தினால் 322,500 ரூபா மரணாதார கொடுப்பனவாக வழங்குவதற்கும் நாம்

5ஆம் பக்கம்

### எச்.என்.பி.கிராமின் வெலிமடை கிளை உத்தியோகத்தர்கள்

**பிரதேச முகாமையாளர்**
காமினி ஆரியசிங்க
**பிரதேச முகாமையாளர்**
ரங்கன மல்லவாராச்சி
**கிளை முகாமையாளர்**
ரோஹன அபேசேகர
**கிளை உதவி முகாமையாளர்**
பிரதீப் நிஷாந்த
**உதவி கணக்காளர்**
குஷாந்த சமிந்த
**வெளிக்கள முகாமையாளர்கள்**
துமிந்த தனூஜ
தீபிக நிலங்க
**வெளிக்கள உத்தியோகத்தர்கள்**
உபாலி ஜயவர்தன
ஜனக் பிரபாத்
திலக் பந்துல
சாஹர சம்பத்
சமன் மனதுங்க
ரசிக பிரசன்ன
யூ.எம்.ஆர். சமிந்த
திலிப் மதுசங்க
சமத் உஷான்
சாமர நுவன்
காமினி பிரசன்ன
இந்திக ஹேரத்
**கணக்கு உதவியாளர்கள்**
சந்தன குணதிலக
சமில மதுசங்க
சஞ்சீவ ஜயலத்
வசந்த ரஞ்சித்
**நிறைவேற்று சேமிப்பு**
சமிந்த புஷ்பகுமார
**நிறைவேற்று சட்டம்**
இஸார சங்கீத்
**நிறைவேற்று – SME கடன்**
சாமர திலுக்

ஆக்கம் - மஞ்சுள பிரபாத் ஹெட்டியாராச்சி
படப்பிடிப்பு: லக்ஷ்மன் குமாரதுங்க



**காமினி ஆரியசிங்க**
பிரதேச முகாமையாளர்



**ரங்கன மல்லவாராச்சி**
பிரதேச முகாமையாளர்



**ரோஹன அபேசேகர**
கிளை முகாமையாளர்



**பிரதீப் நிஷாந்த**
கிளை உதவி முகாமையாளர்



**குஷாந்த சமிந்த**
உதவி கணக்காளர்



**துமிந்த தனூஜ**
வெளிக்கள முகாமையாளர்



**தீபிக நிலங்க**
வெளிக்கள முகாமையாளர்

... 4 ஆம் பக்கத் தொடர்

நடவடிக்கை எடுத்துள்ளோம். சுமாராக குறிப்பிடுவதாயின் அங்கத்தவர்களுடனான கலந்துரையாடல் தொழில் முயற்சி ஆலோசனை என்பன நடத்தப்பட்டுள்ளன. இதன் மூலம் கடந்த காலத்தில் பயிர்ச்செய்கையுடன் தொடர்புடைய நிறுவனங்களை இணைத்துக் கொண்டு நாற்றுமேடை மற்றும் ஏனைய ஏனைய பயிர்ச் செய்கைகளை நவீன நுட்பங்களை கையாண்டு எவ்வாறு மேற்கொள்வது என்பது தொடர்பிலான பயிற்சிப் பாசறைகளையும் நடத்தியுள்ளோம். அவ்வாறே அங்கத்தவர் சமூக நலன்புரி சேவைகளையும் இப்பிரதேசத்தில் காணப்படும் கஷ்டப் பாடசாலையான உடுஹாவர மகா வித்தியாலத்தின் பெயர் பலகையையும் HNB கிராமின் சேமிப்பு பிரிவின் அனுசரணையில் நிர்மாணித்துக் கொடுப்பதற்கு எங்களால் முடிந்தது. நிதித் துறையில் நாளாந்தம் வளர்ந்து வரும் மாற்றங்களை கவனத்தில் கொண்டு மிகவும் நம்பிக்கையும், தரமான சேவையையும் எமது வாடிக்கையாளர்களுக்கு தொடர்ந்து பெற்றுக் கொடுப்போம் என நாம் இந்த சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறோம். இன்று ஹட்டன் நஷனல் வங்கியுடன் இணைந்து நிதி நிறுவனமாக முன்னிலையில் திகழ்ந்து நிதிச் சேவையில் பாரிய பல்வேறு மாற்றங்களை HNB கிராமின் நிறுவனத்தினால் ஏற்படுத்த முடிந்துள்ளது. சிறிய முயற்சியாளர்களைப் போன்று எமது அங்கத்தவர்களுக்கு சிறப்பானதும் இலகுவானதும் புதிய சுயதொழில் முயற்சிக்கான சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக் கொடுத்து பொருளாதார அபிவிருக்கு பக்கபலமாக திகழ்வதே எமது நோக்கமாகும்.

எச்.என்.பி.கிராமின் பைனான்ஸ் லிமிட்டெட்
இல. 33/1
ஹப்புத்தளை வீதி, வெலிமடை
தொலைபேசி: 057 2244800
மின்னஞ்சல்: welimada@hnbgrameen.lk

## வியாபாரத்தின் வெற்றியானது பெற்றுக் கொள்ளும் கடனை வியாபார முயற்சியில் முழுமையாக ஈடுபடுத்துவதில் தங்கியிருக்கிறது...

வீட்டின் சுவர்களை அலங்கரிக்கும் வகையில் தொங்கவிடப்பட்டிருக்கும் அழகிய ஓவியங்கள் பற்றி நாம் அனைவரும் அறிந்திருக்கிறோம். வீட்டுச் சுவர்களில் இவ்விதம் உருவங்களுடன் அல்லது உருவங்கள் இல்லாது சில ஓவியங்கள் காணப்படுவதை நாம் அவதானித்திருக்கின்றோம். ஸ்கீரின் பிரிண்டின் என்ற நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி வீட்டுச் சுவர்களில் உருவங்கள் மற்றும் உருவங்கள் இல்லாது அலங்கரிப்பது பார்க்கும் எவரையும் கண்கவர் ஒன்றாக திகழும் என்பதில் சந்தேகமில்லை.

திருமதி ஆர்.எல்.எல்.பெரேராவின் வீட்டுக்குள் நாங்கள் சென்ற போது அவரினால் புதிதாக படைக்கப்பட்டுக் கொண்டிருந்த புதிய படைப்பிற்கு பென்சிலால் வர்ணங்களை பூசிக் கொண்டிருந்ததை நாங்கள் அவதானித்தோம். பெரிய மேசையொன்றில் வரையப்பட்ட ரத்னமாலி உருவங்கள், தலதா மாளிகை பெரஹெர, இரவுக் காட்சிகள் ஆகியன வீட்டின் சுவர்களில் தொங்கவிடப்பட்டு காட்சிப்படுத்தப்பட்டிருந்தன. இது அவரது ஆற்றல்களின் வெளிப்பாடு மாத்திரமின்றி கலைஞரின் படைப்பாகவும் காண முடிந்தது. இந்தத் தொழிலை சிறப்பாக முன்னெடுக்க எச்.என்.பி.கிராமின் "திரிய" கடன் திட்டம் அவருடைய வளர்ச்சியில் பாரிய நிவாரணமாகும் . . . அவரிடம் இது தொடர்பில் கேட்ட போது, சுமார் ஆறு வருடங்களாக இந்தத் தொழிலில் ஈடுபட்டு வருகின்றேன். அண்மைக்காலம் முதல் எனது சகோதரரையும் இந்தத் தொழிலில் ஈடுபடுத்தியுள்ளேன். இதற்கு தேவையான மூலப்பொருட்களை கொழும்பு ஹேலிஸ் பிரதேசத்தில் இருந்து கொண்டு வருகின்றோம். கைத்தொழிலுக்கு தேவையான கடனை நான் கிராமின் நிறுவனத்தின் திரிய கடனில் இருந்து பெற்றுக் கொண்டேன். முதலில் 20,000ரூபாவை கடனாகப் பெற்றேன். கிராமின் நிறுவனத்தில் இலகுவாக கடன் பெறலாம். அவர்கள் கடனை வழங்கும் போது அந்த முயற்சியில் நூற்றுக்கு நூறு வீதம் முதலீடு செய்கிறார்கள் என்பதையே அவதானிக்கிறார்கள். ஏனெனில் இதன் மூலமே வியாபாரத்தின் வெற்றி தங்கியுள்ளது. எமது படைப்புகளுக்கு சந்தையில் நல்ல கிராக்கி நிலவுகிறது. இதனால் எமது தொழில் முயற்சியின் எதிர்காலம் தொடர்பில் சந்தேகம் கொள்ளத் தேவையில்லை.

திருமதி ஆர்.ஏ.எல். பெரேரா
வெரல்லவத்தை,
கெப்பட்டிபொல




## சேமிப்பின் மூலம் அதிக வட்டியைப் பெற்றுக்கொள்வதுடன் சேமிப்பு பழக்கத்தையும் எம்மால் கடைப்பிடிக்க முடிந்துள்ளது

### எமது வியாபாரத்தை கட்டியெழுப்ப முடிந்துள்ளது



"இந்தப் பிரதேசம் பயிர்ச் செய்கைக்கு ஏற்ற காலநிலையையே அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது. இதனால், பயிர்ச்செய்கையில் அதிகமானவர்கள் ஈடுபடுவதை எம்மால் காண முடிந்தது. நாம் பூ வளர்ப்பில் சுமார் பன்னிரண்டு வருடங்களாக ஈடுபட்டு வருகின்றோம். பூ வளர்ப்பை தனது கைத்தொழிலாக கொண்டு நடத்தும் திருமதி சமரசிங்க தனது உற்பத்தி தொடர்பில் இவ்விதம் கருத்துக்களை பகிர்ந்து கொண்டார். பூ உற்பத்தியை கைத்தொழிலாக மேற்கொள்ளும் போது பல்வேறு பிரச்சினைகள் எழுகின்றன. குறிப்பாக பூ கன்றுகளை நடுவதற்கு பொலித்தின் பைகளை (Tunnel) கொள்வனவு செய்வதற்கு பணம் தேவைப்படும். நான் 2013ஆம் ஆண்டில் கிராமின் நிறுவனத்தில் இணைந்து கொண்டு 35,000ரூபாவை கடனாகப் பெற்றுக் கொண்டேன்.

கிராமின் நிறுவனத்தில் இணைந்து கொண்டு பெற்ற கடன் தொகையால் பணப்பிரச்சினையை இலகுவாக தீர்த்துக் கொள்ள முடிந்தது. ஏனெனில், பணம் எதற்காக தேவைப்படுகின்றது என்பதை அடையாளம் கண்டு அதற்கேற்றவாறு என்னால் திட்டமிட முடியுமாக இருக்கிறது. இன்று வரை நான் இரண்டரை இலட்சம் ரூபா வரை கடன் பெற்றுள்ளேன். இந்தப் பணத்தின் பெரும்பகுதியை நான் பொலித்தின் பைகளை வாங்குவதற்கும் புதிய பூக்கன்றுகளை வளர்ப்பதற்கும் பயன்படுத்தினேன். நாம் சந்தையை நோக்கி செல்ல வேண்டியதில்லை. ஏனெனில் வியாபாரிகள் எம்மிடம் வந்து பூ கன்றுகளை வாங்கிச் செல்கிறார்கள். கிடைக்கும் இலாபத்தை அதிக வட்டி தரும் மியுலெஸி மகளிர் சேமிப்பு கணக்கில் வைப்பிலிட்டு அதிக வட்டியையும் பெற்றுக் கொள்கிறேன். அவ்வாறே சேமிப்பு பழக்கத்தையும் உருவாக்கிக் கொள்ள எம்மால் முடிந்துள்ளது.

டபிள்யு.எம்.எம். சமரசிங்க,
சந்தலி கார்டன்ஸ்
விரஹாவத்த

## நாம் திருப்தியடையும் வகையில் நுண்நிதிச் சேவையை எச்.என்.பி. கிராமின் நிறுவனம் வழங்கி வருகின்றது

மரக்கறி உற்பத்திகளுக்கு வெலிமடை பிரசித்தி பெற்ற இடமாகும். குறிப்பாக உருளைக்கிழங்கு, லீக்ஸ், கரட், கோவா போன்ற உற்பத்திகள் பிரதானமானவை. ஆனந்த லக்ஷ்மியின் லீக்ஸ் உற்பத்திகள் பதுளை, ஹக்கலை வீதியின் ஹக்கலைக்கு அருகாமையில் உள்ள குறுக்கு வீதிக்கு சென்றால் பார்வையிட முடியும். ஹக்கலையின் இருபக்கத்தையும் ஊடறுத்து மழைக்கு மத்தியில் நாம் அவரின் லீக்ஸ் உற்பத்தியை பார்க்கச் சென்றோம். பாரிய பள்ளத்தில் நாட்டப்பட்டிருந்த பயிர்களை அவதானிக்கும் போது அவை மிகவும் அழகாக தோற்றமளித்தன.

எமது தாய், தந்தையரும் இதே தொழிலில் ஈடுபட்டு வந்தனர். புதிதாக நிலத்தை பண்படுத்தி பயிர்களை நடும் போதே அதிகளவான பணம் தேவைப்படும். நான் எச்.என்.பி.கிராமின் நிறுவனத்தில் பயிர்ச்செய்கைக்கு தேவையான பணத்தைப் பெற்றுக் கொள்ளும் நோக்கிலேயே இணைந்து கொண்டேன். கடனைப் பெற்றுக் கொள்ளும் ஏனைய நிதி நிறுவனங்கள் காணப்படாத இலகு திட்டங்கள் கிராமின் நிறுவனத்தில் காணப்படுகின்றன. கடந்த மூன்று ஆண்டுகளாக பல தடவைகள் பல்வேறு தொகைகளில் கடனைப் பெற்றுள்ளேன். இந்தக் காலப்பகுதியில் நான் வேறு நிறுவனங்களுக்கு செல்லாமைக்கான காரணம் எமக்கு திருப்தியான நிதிச் சேவையொன்று எச்.என்.பி.கிராமின் நிறுவனத்தில் கிடைப்பதாலாகும்.

கே. ஆனந்த லக்ஷ்மி
ஹக்கலை தோட்டம்
பொரகஸ்



**தொழில் செய்ய அஞ்சுபவனுக்கு வாழ்க்கையில் ஒரு நாளும் முன்னேற முடியாது.**




பிரைம் கிராமின் மைக்ரோ பினான்ஸ் கம்பனியின் முகாமைத்துவ பணிப்பாளர் / பிரதம நிறைவேற்று அதிகாரி சமிந்த பிரபாத் அவர்களுடனான நேர்காணலை கீழே தருகின்றோம்

# கடன் விண்ணப்பப்படிவத்தின் பங்கினை அறிவோம்

எந்தவொரு நுண் நிதி நிறுவனமும் கடன் வழங்குவதன் மூலம் வருமானத்தைப் பெற்றுக் கொள்கின்றன. மிகச் சிறந்த கடனொன்றை வழங்கும் போது ஏனைய நிதி நிறுவனங்களின் போட்டிக்கு முகம் கொடுக்க வேண்டிய சவாலையும் நிதி நிறுவனங்கள் எதிர்நோக்க வேண்டியேற்படும். ஒரு நிறுவனம் போட்டிக்கு முகம் கொடுக்கும் போது மிகச் சிறந்த கடனொன்றை வழங்குவதில் பாரிய சவால்களுக்கு முகம் கொடுக்கலாம். மொட்டைக் கத்தியில் பால் எடுப்பது போன்ற இந்த செயற்பாடானது வாடிக்கையாளரை திருப்திபடுத்துவதும் அவர்களை சரியாக அடையாளம் காண்பதும் கடனை வழங்குபவரின் பொறுப்பாகும். வாடிக்கையாளரை திருப்திபடுத்துவது தொடர்பில் நுண் நிதி நிறுவனங்கள் கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறைகள் தொடர்பில் கடந்தவார மெஹவர சஞ்சிகையில் நாம் விரிவாக உங்களுக்கு தெரிவித்திருந்தோம். ஊக்குவிப்பு வேலைத்திட்டத்தின் மூலம் அல்லது வேறு வழியில் கடனை பெற்றுக் கொள்வதற்காக நுண் நிதி நிறுவனங்களுக்கு வருகை தரும் வாடிக்கையாளரின் தகவல்களை அறிந்து கொள்வது அவர்களின் பூரணப்படுத்தப்பட்ட கடன் விண்ணப்பப்படிவத்திலாகும். அந்த கடன் விண்ணப்பப்படிவத்தின் ஊடாக கொடுக்கல் வாங்கல் செய்பவர் தொடர்பாகவும் அவர் எவ்வளவு கடனை எடுக்க உள்ளார் என்பது தொடர்பாகவும் கடன் வழங்கும் உத்தியோகத்தருக்கு ஓரளவாகவேனும் அறிந்து கொள்ள முடியும்.

### கடன் விண்ணப்பப்படிவத்தை தயாரிப்பது எவ்வாறு?

கடன் விண்ணப்பப்பத்திரம் யாருக்கு வழங்கப்படுகிறது என்பதை தெளிவாக புரிந்து கொள்ளும் வகையில் எளிமையாக தயாரிக்கப்பட வேண்டும். பெற்றுக் கொள்பவரின் தகவல்கள், கடன் பெறுவதற்கான உண்மையான நோக்கம் என்பன குறிப்பிடப்பட்டிருப்பதுடன் அவற்றை வாடிக்கையாளர் இலகுவாக பெற்றுக் கொள்ளும் வகையில் தெரிவிக்கப்பட்டிருக்க வேண்டும். சில வாடிக்கையாளர்களுக்கு எழுதத் தெரியாத கல்வியில் கீழ்மட்டத்தில் இருப்பவர்கள் கடனுக்காக விண்ணப்பிக்கும் போது கடன் விண்ணப்பப்படிவத்தை கடன் வழங்கும் உத்தியோகத்தரினால் பூர்த்தி செய்து கொடுக்க வேண்டியேற்படும். கடன் விண்ணப்பப்படிவத்தில் கடன் தொகையை பெற்றுக் கொள்ளும் போது குறிப்பிடப்பட்டிருக்கும் சலுகைகள், கடன் விண்ணப்பதாரி கொண்டிருக்க வேண்டிய தகுதி என்பன தொடர்பாகவும் விரிவாக குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும். விண்ணப்பப்படிவத்தில் வழங்கப்பட்டுள்ள தகவல்களுக்கு ஏற்ப கடனுக்கு விண்ணப்பிக்கும் நபரை இலகுவாக தொடர்பு கொள்ளும் முறை அதாவது கடனுக்கு விண்ணப்பிக்கும் நபரின் முகவரி, குடும்ப விபரங்கள், உடல் நலம், கல்வித்தரம், தொழில் வாய்ப்பு, கைத்தொழிலுடன் தொடர்புடைய தகவல்கள் மற்றும் அது எவ்வகையான தொழில் போன்ற விடயங்கள் வெளிப்படுத்தப்பட வேண்டும். கடனுக்கு விண்ணப்பிப்பவரின் நிரந்தர வருமானம் தொடர்பான தகவலும் வெளிப்படுத்தப்பட வேண்டுமென்பது கடன் விண்ணப்பதாரியின் விசேட செயற்பாடாகும். அவ்வாறே கடனுக்கு விண்ணப்பிப்பவரின் வருமானம் எவ்விதம் கிடைக்கின்றது என்பது தொடர்பாகவும் சரியான தகவல்களை வெளிப்படுத்த வேண்டும். கடனுக்கு விண்ணப்பிப்பவர் வருமானத்தை நாளாந்தமா, மாதாந்தமா அவ்வாறில்லையானால் ஒரு குறிப்பிட்ட காலப்பகுதியிலா போன்ற விடயங்களையும் அவரின் சொத்து விபரங்களையும் அதன் தன்மைகளையும் விண்ணப்பப்படிவத்தில் வெளிப்படுத்த வேண்டும். கைத்தொழிலின் பாதுகாப்பு தொடர்பிலும் விண்ணப்பதாரியின் கைத்தொழில் திட்ட அறிக்கையுடன் தனது தனிப்பட்ட வாழ்க்கையில் உருவாக்கப்பட்டதா என்பது தொடர்பில் கடன் பெறுபவர் அறிந்திருந்தால் கடனை மீளச் செலுத்துவதில் ஏற்படக் கூடிய தாமதங்களை குறைந்த மட்டத்தில் பேணக் கூடியதாக இருக்கும்.

### எசிட் டெஸ்ட் (Acid Test)

கடன் பெறுபவரின் வருமானத்துக்கு ஏற்ப அவரின் செலவு செய்யப்படுகின்றதா என்பதை ஆராய்ந்து அதற்கேற்ப விண்ணப்பதாரிக்கு கடனை எந்த அடிப்படையில் பெற்றுக் கொடுப்பது என்பது தொடர்பான செயற்பாட்டை நுண் நிதி நிறுவனங்கள் எவ்விதம் கையாளுகின்றன என்பதை ஆராயும் செயற்பாட்டை எசிட் டெஸ்ட் என அறிமுகப்படுத்த முடியும். இதில் குடும்பத்தின் மாதாந்த செலவினையும், கைத்தொழிலின் மூலம் பெறக்கூடிய வருமானத்தை கணக்கீடு செய்து அந்த மாதத்தின் வருமானத்துக்கும் செலவினதுக்கும் இடையிலான வேறுபாட்டின் ஐம்பது சதவீதத்தை நுண் நிதி நிறுவனங்கள் கடனாக வழங்க முடியும். அண்ணளவாக தெரிவிப்பதானால், விண்ணப்பதாரி கைத்தொழில் மூலம் மாதாந்தம் ஒரு இலட்சம் வருமானமாக பெற்றால் வீட்டு செலவினம் 50,000ரூபாவாக இருந்தால் இதற்கிடையிலான வேறுபாடு 50,000ரூபாவாகும். 50வீதம் என்றால் 25 வீதத்தை கடனாக நிதி நிறுவனங்களுக்கு வழங்க முடியும். இதனடிப்படையில் கடனுக்கு விண்ணப்பிப்பவர் விண்ணப்பப்படிவத்தையும் எசிட்டெஸ்ட் கணக்கீடு செய்து அதனடிப்படையில் நுண் நிதி நிறுவனங்கள் கடன் வழங்கும் தொகையை தீர்மானம் செய்ய முடியும்.

# நாளின் இனிமையான எட்டு மணித்தியாலங்கள்

## பணிகளின் உற்பத்தித்திறனை அளவிடுவதற்கு அதுவொன்றும் அடிமட்டமல்ல

உற்பத்தி திறன் என்ன என்பதை நாம் முதலில் அறிந்து கொள்வோம். இந்தக் கருத்தினை இரண்டாகப் பிரித்து பார்த்தால் அதன் அர்த்தத்தை இலகுவாக புரிந்து கொள்ளலாம். உற்பத்தி – திறன். உற்பத்தியை ஊக்குவிப்பதாகும். அதாவது முயற்சியின் மூலம் பெறுபேறை பெற்றுக் கொள்வதாகும். ஆங்கிலத்தில் இந்த சொல்லுக்கு பல்வேறு அர்த்தங்கள் காணப்படுவதுடன் உற்பத்தி திறன் என்ற சொல்லுக்கு ஆங்கிலத்தில் Productivity என்று கூறப்படுகிறது. இந்த சொல்லானது பல பகுதிகளைக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளதை அறியக்கூடியதாக இருக்கின்றது.

Pro - duct – tivity இந்த வசனங்களில் சொற்கள் உடைந்து காணப்படுவதை அவதானிக்க முடிகின்றது. Pro - product - activity - productivity - pro- அதாவது பல்வேறு கருத்துக்கள் காணப்படுகிறன. இவை அனைத்தும் ஒன்றிணைந்தே உற்பத்தி திறன் என அழைக்கப்படுகிறது. தயாரிப்பு, செயற்பாடு, உற்பத்திதிறன், சார்பு ஆகிய கருத்துக்களை உள்ளடக்கியதே உற்பத்திதிறனாகும். இதில் காணப்படும் product என்ற சொல்லின் கருத்தானது உற்பத்தி அல்லது நிர்மாணம் அல்லது தயார்படுத்தல் ஆகிய அர்த்தங்களை கொண்டிருக்கிறது. product எம்மால் செய்யப்படும் ஒன்றாகும்.

பூர்த்தி செய்யப்பட்ட ஒன்றுக்கு product என்று கூற முடியும். உதாரணமாக கூறுவதாயின் காலை வேளையில் காரியாலயம் ஆரம்பிக்கப்பட்டது முதல் மாலை வேளையில் காரியாலயம் மூடப்படும் வரையில் தொழில்புரியும் பணியாளர்களுக்கு சரியாகவும், முழுமையாகவும் இதுதான் இன்று எம்மால் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது என்று கூற முடியும். இதன் அடுத்த சொல்லானது activity செயல்திறனாகும். இதனை கட்டாயமாக ஒவ்வொரும் செய்தே ஆக வேண்டும். நபர் ஒருவர் அந்த நாளில் செய்த வேலைகளின் ஒட்டுமொத்த செயற்பாடுகளே உற்பத்திதிறனாகும். ஒக்ஸ்போட் அகராதியில் உற்பத்திதிறன் என்ற சொல்லுக்கு பல பகுதிகளின் ஒட்டுமொத்த வெளியீடாகும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. சாதாரண வார்த்தையில் சொல்வதாயின் ஒரு நாளின் இறுதியில் தனிநபர் ஒருவர் வினைத்திறன் மிக்க நபர் என்பது தீர்மானிக்கப்படுவது அந்த நபர் அதிகாலையில் துயில் எழுந்தது முதல் நித்திரைக்கு செல்லும் வரையிலான காலப்பகுதியில் பெற்ற பெறுபேறுகளை குறிக்கின்றது.

தனிப்பட்ட வாழ்க்கையில் இதனை உதாரணமாக கூறுவதாயின், நாளாந்த வாழ்வில் பிரதான ஒன்றாக குளித்தல் காணப்படுகிறது. குளித்த பின்னர் சில விடயங்கள் எம்மில் இயற்கையாக ஏற்படுகின்றன. தெளிவு, மனமகிழ்ச்சி, சுறுசுறுப்பு, ஒரு வேலையைச் செய்வதில் ஆர்வம் ஏற்படுவதுடன் உடம்பு பரிசுத்தமடைந்துள்ளது என்று உணர்வும் எம்மில் ஏற்படுகின்றது. இவ்விதம் எமக்கு ஏற்படாவிட்டால் அதன் வினைத்திறன் முழுமையாக கிடைக்காது. இவ்விதம் உணவு உட்கொள்ளல், கல்வி கற்றல் போன்ற சகல செயற்பாடுகளும் வெவ்வேறாக காணப்பட்டாலும் அவற்றுக்கிடையில் நெருங்கிய தொடர்பு உற்பத்திதிறனுடன் காணப்பட வேண்டும். சாப்பிட்டவுடன் பசியாற வேண்டும். கல்வி கற்றால் படித்த பாடங்கள் ஞாபகத்தில் இருக்க வேண்டும். இந்த சகல செயற்பாடுகளிலும் எமக்கு கிடைக்க வேண்டிய பெறுபேறுகள் கிடைத்தால் மாத்திரமே அந்த நாள் வினைத்திறனான / உற்பத்திதிறனான நாளாக கருத முடியும். பணிபுரியும் இடங்களிலும் செய்யும் வேலைக்கேற்ற பெறுபேறு கிடைப்பதன் மூலமே உற்பத்தி திறனை அடைந்து கொள்ள முடியும்.

நாம் ஆரம்பத்தில் குறிப்பிட்டது போன்று உற்பத்திதிறனை அடைந்துகொள்ள சில விடயங்களை நடைமுறைப்படுத்த வேண்டியுள்ளது. நிறுவனங்களைப் பொறுத்தவரை தொழில் செய்துவிட்டு மாலை நேரத்தில் கையொப்பமிட்டு வீடு செல்ல வேண்டும். சகலரும் சகல சந்தர்ப்பத்திலும் அதிக வேலைப்பளு என்று காட்டிக்கொள்வர். சில சந்தர்ப்பத்தில் உணவு உண்ணும் நேரத்திலும் வேலை செய்து கொண்டிருப்பர். எனினும் தொடர்ச்சியாக அனைத்து வேலைகளையும் ஒன்றுதிரட்டி செய்தாலும் அந்தக் குழு வினைத்திறன்மிக்கதா என்பதை முடிவு செய்ய முடியாதுள்ளது. இதன் காரணத்தினால் தான் அதிக வேலைப்பளு வினைத்திறன் என்று கூற முடியாது. இதற்கு நல்லதொரு கதையை கூற முடியும். அது என்ன...? அடுத்த இதழில் சந்திப்போம்

**ஆளுமைப் பயிற்சி நிபுணர்
குமா இத்தல்கம**



சகல செயற்பாடுகளிலும் எமக்கு கிடைக்க வேண்டிய பெறுபேறுகள் கிடைத்தால் மாத்திரமே அந்த நாள் உற்பத்திதிறனான நாளாக கருத முடியும். பணிபுரியும் இடங்களிலும் செய்யும் வேலைக்கேற்ற பெறுபேறு கிடைப்பதன் மூலமே உற்பத்தி திறனை அடைந்து கொள்ள முடியும்.


# புதுமைமிகு உலகம்



கூடுதலான பாரம் தூக்கக்கூடிய பிராணி தேனி



பற்களின் எண்ணிக்கையை வைத்து குதிரையின் வயதை அறிய முடியும்




லியோ டொல்ஸ்தோயிட் "யுத்தமும் சமாதானமும்" என்ற நூலை தொடர்ச்சியாக 6 வருடங்கள் எழுதியுள்ளார்



மனித உடலில் உள்ள சாதாரண இரத்தத்தின் அளவு 5.5 லீற்றர்



மனிதனின் நாடி நாளாந்தம் பத்தாயிரம் தடவைகள் துடிக்கின்றன



கடல் யானையின் உடம்பில் வியர்வைக்கு பதிலாக இரத்தமே வெளியேறுகிறது



வண்டுகளுக்கு நுரையீரல் இல்லை




வெட்டுக்கிளிகளின் காது முழங்காலுக்கு கீழே காணப்படுகிறது



முல்லந்தண்டு ஒரே வரிசையாக காணப்படும் விலங்கினம் காகமாகும்



உலகத்திற்கு சரியான நேரத்தைக் காட்டிக் கொடுப்பது இங்கிலாந்தில் உள்ள கிரீன்வீச் ஆய்வுக்கூடமாகும்.



சனத்தொகை பெருகும் போது "லேமிங்" என்ற உயிரினம் தன்னைத் தானே தற்கொலை செய்து கொள்ளும்



எறும்புகள் தனது கருத்துக்களை உரசல்கள் மூலம் பறிமாறிக் கொள்கின்றன


தோற்போம் என்ற எண்ணத்தை கைவிட வேண்டும்.



வாழ்நாள் முழுதும்
தொங்கிக் கொண்டே வாழும் உயிரினம் சிலந்தி



உலகின் பிரசித்தி பெற்ற
சைக்கிளோட்ட சவாரி சீனாவின் பீஜிங் நகரில்



உலகின் வெப்பமான இடமாக
கருதப்படும் இந்தியாவின் டார் பாலைவனம்



600 டொராவோல்ட் வெப்பத்தை வெளியிடும் மீனினம்

## உலகின் மிகவும் உயரமான கட்டிடம்



உலகில் நிர்மாணிக்கப்பட்ட மிக உயரமான கட்டிடம் என்ற சாதனையை புர்ஜ் கலீபா கட்டிடம் படைத்துள்ளது. இந்த கட்டிடம் 2010 ஜனவரி மாதம் 04ஆம் திகதி திறந்து வைக்கப்பட்டது. இது புர்ஜ் கலீபா கோபுரம் என அழைக்கப்படுகிறது. 828 மீற்றர் உயரம் கொண்ட அதாவது 2217அடி உயரமான புர்ஜ் கலீபா பொது மக்கள் பார்வையிடும் வகையில் 160 மாடிகளைக் கொண்டு நிர்மாணிக்கப்பட்டுள்ளது. இதற்கு மேலதிகமாக செயற்பாட்டு பணிக்காக 46 மாடி காணப்படுவதுடன் வாகனங்கள் நிறுத்தி வைப்பதற்காக இரண்டு மாடிகளும் நிர்மாணிக்கப்பட்டுள்ளன. இந்த கோபுரத்தில் 24,348 ஜன்னல்கள் இருக்கின்றன. இந்தக் கோபுரத்தின் வெளிப்புற தோற்றமானது பாலைவனத்தில் பூக்கும் கைமெனோகெலிக்ஸ் மலரை அடிப்படையாக வைத்து நிர்மாணிக்கப்பட்டுள்ளது. 57 மின் உயர்த்திகளும் 8 மாடிகளுக்கு செல்லும் வகையில் படிகட்டுகளும் அமைக்கப்பட்டுள்ளன. அத்துடன் மேல் மாடிக்குச் செல்லும் மின் உயர்த்தியானது விநாடிக்கு 10 மீற்றர் வேகத்தில் செல்லுமாறு பொருத்தப்பட்டுள்ளது. இதுவே உலகில் வேகமாக செல்லும் மின் உயர்த்தியாகவும் காணப்படுகிறது. பொதுமக்கள் பார்வையிடும் வகையில் நிர்மாணிக்கப்பட்டுள்ள இந்தக் கோபுரம் முன்பதிவு செய்து பார்வையிட முடியும். அவ்வாறே, ஒரு குறிப்பிட்ட அளவு பணத்தையும் செலுத்தி கோபுரத்தை பார்வையிட முடியும்.

## காலின் ஊடாக ருசியை அறியும் கடல்நண்டு



கடல் நண்டு தனது காலின் மூலமே உணவின் ருசியை அறிந்து கொள்கிறது என்ற செய்தி எமக்கு புதுமையாக இருக்கலாம். அதாவது கடல் நண்டுகளின் பற்கள் தனது கால்களுக்கு அருகிலேயே காணப்படுகின்றன. சிறுநீரகம் நெற்றிக்கு பின்னால் காணப்படுகின்றது. இதன் கால்களின் மூலம் சத்தத்தை அறிந்து கொள்கிறது.

தடைகளுக்கு மத்தியில் பெறும் வெற்றியானது பொறுமையின் வடிவமாகும்.

# கிராமின் சக்தி



## அவரின் வளர்ச்சி



குடும்பத்தவர், உற்றாரைப் போன்று

# கிராமின் நிறுவனம் எமது வாழ்க்கையிலும் இணைந்து விட்டது

வாழ்க்கையில் சிலருக்கு சகல செல்வங்கள் இயற்கையாகவே கிடைக்கின்றன. எனினும் அனேகமானவர்களின் வாழ்க்கையை அவதானிக்கும் போது அவர்களினால் மிகவும் கஷ்டப்பட்டு தேட வேண்டியிருக்கிறது. இவ்விதம் ஒரு வாழ்க்கை இரண்டு பிரிவினராக இருவேறாக கிடைத்துள்ளமை இயற்கை வரமாகவும் அல்லது இவ்வுலகுக்கு இவ்விதம் தான் அனுப்பப்பட்டுள்ளோம் என்று கருதி வாழ்வதற்கு நாம் பழகிக் கொள்ள வேண்டும்.

வாழ்க்கையில் இடம்பெறக்கூடிய இன்ப, துன்பங்களை நினைத்து கவலையடையாமல் பொறுமை, விட்டுக் கொடுப்பு மற்றும் உறுதியுடன் பலர் வாழ்க்கையில் வெற்றி பெற்றுள்ளனர். எனினும் பிறக்கும் போதே சகல செல்வங்களுடன் பிறந்தவர்களை விட வாழ்க்கையில் கஷ்டப்பட்டு முன்னிலைக்கு வந்தவர்கள் அந்த வெற்றியை பெறுவதற்காக தான் கஷ்டப்பட்ட அனுபவத்தை பலதடவை கூறியுள்ளதை நான் அறிந்திருக்கிறேன். கடந்த காலத்தில் இடம்பெற்ற கசப்பான அனுபவங்கள் மற்றும் பிரச்சினைகளை இன்றும் ஞாபகப்படுத்தி அதன் வடுக்களை நாளாந்தம் நினைத்து கொண்டிருப்பது வாழ்க்கையில் எவ்வித பயனும் இல்லை. உண்மையாகவே வரலாற்றில் இருந்து பாடங்களை கற்று அதன் மூலம் வாழ்க்கையை வெற்றி பெறுவதற்கு முயற்சிகளை மேற்கொள்வது அவசியமாகும்.

ஐனூன் ஜெலீலா ஸரீன்டீன் - இவர் ஒரு முஸ்லிம் பெண்ணாகும். வெலிமடைக்கு அண்மையில் அமைந்துள்ள கிராமத்தில் சுமார் ஆறு தசாப்தங்களுக்கு முன்னர் இவர் பிறந்தார். இவர் பிறக்கும் போது அந்தக் கிராமம் இன்று இருப்பதை விட மிகவும் பின்தங்கிய கிராமமாக காணப்பட்டது. சகோதர, சகோதரிகள் நால்வர் கொண்ட குடும்பத்தில் இவர் இரண்டமவர். ஜெலீலா பிறக்கும் போதே தனது பெற்றோரின் வாழ்க்கைப் போராட்டத்தில் வெற்றி பெறுவதற்கு சிறு பராயம் முதல் முயற்சிகளை செய்து வந்தார். தகப்பனின் சிறிய மரக்கறி கடை மற்றும் தேனீர் கடையில் பெறக்கூடிய வருமானத்துக்கு மேலதிகமாக தனது தாயாரும் தையல் செய்து தனது குடும்ப வருமானத்துக்கு வலு சேர்த்தார்.

“. . . வன்னிய கும்புறு மகா வித்தியாலயத்தில் உயர் தரம் வரை நான் கல்வி கற்றேன். எமது பெற்றோர் எங்களை நன்றாக படிக்குமாறு உற்சாகமூட்டினார்கள். நாங்கள் குப்பி விளக்கினைப் பயன்படுத்தி கல்வி கற்றது இன்றும் ஞாபகம் இருக்கிறது. அந்தக் காலப்பகுதியில் எங்களுக்கு மின்சாரம் இருக்கவில்லை. படித்த முடிந்தவுடன் நான் தொழில் ஒன்றைத் தேடினேன். எனினும் எனக்கு கிடைக்கவில்லை. தையல் தொழில் எனக்கு சிறு வயது முதல் நல்ல ஆர்வம் இருந்ததுடன் அதனை நன்றாக பயின்றிந்தேன். இருப்பதை வைத்து வாழ்க்கையை நடத்துவதற்கு நான் பழகிக் கொண்டேன். அவ்விதம் நான் வீட்டில் இருந்தே தையல் தொழிலை செய்ய ஆரம்பித்தேன். எனது தாயாரும் உதவி செய்தார். அக்கம் பக்கத்தில் உள்ளவர்களின் ஆடைகளையே ஆரம்பித்தில் தைத்து கொடுத்தேன். இந்தப் பிரதேசத்தில் எந்தவொரு தையல் நிலையமும் அக்காலத்தில் இருக்கவில்லை. இவ்விதம் இருக்கும் போதே நான் திருமணம் செய்து கொண்டேன். எனது கணவர் சேல்ஸ் ரெப் ஆக தொழில் புரிந்தார். திருமணத்தின் பின்னர் பலகாலமாக நான் வாடகைக்கு தையல் செய்வதை நிறுத்தி விட்டு மகரமையில் இருந்து துணிகளை கொண்டு வந்து தைப்பதற்கு ஆரம்பித்தேன். இதன் போது நான் மணமகள் அலங்காரமும் செய்தேன். இன்று அடிக்கொரு மணமகள் அலங்கார கடைகள் காணப்பட்டாலும் அக்காலப்பகுதியில் இந்த தொழிலுக்கு அந்தளவுக்கு முக்கியத்துவம் கொடுக்கவில்லை. அவ்வாறே இந்தத் தொழிலில் ஈடுபடுபவர்களும் குறைவாகவே இருந்தனர். இந்தப் பகுதியில் நான் மாத்திரமே இருந்தேன். வீட்டு வேலைகளையும் செய்து கொண்டு பிள்ளைகளையும் கவனித்துக் கொண்டு நான் சிறிதாக இந்தத் தொழிலில் ஈடுபட்டு வந்ததுடன் இதன் மூலம் பெரியளவு வருமானம் கிடைக்கவில்லை.

2005ஆம் ஆண்டு எனது நண்பியிடம் இருந்து செய்தி கிடைத்தது. சிறு வியாபாரிகளுக்கு கடன் வழங்கும் நிறுவனமான கிராமின் நிறுவனம் இருப்பதாக அவர் தெரிவித்தார். உடனடியாக நானும் அந்த நிறுவனம் தொடர்பில் ஆராய்ந்து பார்த்தேன். அந்தக் காலப்பகுதியில் எமது பிரதேசத்தில் கிராமின் மத்திய நிலையம் இருக்கவில்லை. நான் வெலிமடை கிளை உத்தியோகத்தர்களை சந்தித்து குருதலாவையில் மத்திய நிலையமொன்றை ஆரம்பிக்குமாறு வேண்டுகோள் விடுத்தேன். குருதலாவையில் மத்திய நிலையமொன்று ஆரம்பிக்க நாம் பல்வேறு முயற்சிகளை செய்தோம். இந்த சந்தர்ப்பத்தில் எமது பள்ளிவாசலில் எனக்கெதிராக முறைப்பாடு தெரிவிக்கப்பட்டது. கடனுக்கு பணம் எடுப்பது, வட்டி செலுத்துவது ஆகியன இஸ்லாத்தில் தடை செய்யப்பட்டிருப்பதாலாகும். அந்த சந்தர்ப்பத்தில் நான் கிராமின் நிறுவனத்தில் அங்கத்தவராக இணைந்து 25,000ரூபா கடனைப் பெற்றிருந்தேன். பள்ளிவாசல் ஊடாக எனக்கு உதவி செய்தால் நான் அந்த நிறுவனத்தில் இருந்து கடனுக்கு பணம் எடுக்க மாட்டேன் என்று கூறினேன்.

நான் கிராமின் நிறுவனத்துடன் தொடர்ந்து அங்கத்தவராக இருந்தேன். கடனும் எடுத்து அதனை மீளச் செலுத்தினேன். மீண்டும் கடனை எடுத்தேன். வீட்டில் செய்து வந்த கைத்தொழிலை “ரெட்ரோஸ்” என்ற பெயரில் தையல் நிலையமொன்றை ஆரம்பித்தேன். இந்த பரப்பளவு எங்களுக்கு போதாமல் இருந்தது. இதனால், எமது கடைக்கு அருகாமையில் உள்ள காணியில் கடையொன்றை நிர்மாணித்து வருகிறேன். விரைவில் அங்கு எமது விற்பனை நிலையத்தை நடத்துவதற்கு தீர்மானித்துள்ளேன். எமது பிரதேசத்தில் பல தையல் நிலையங்கள் காணப்படுவதால் எங்களுக்கு குறைவான வாடிக்கையாளர்களே இருக்கின்றனர். இதனால், எமக்கு தெரிந்தவர்கள் ஊடாக பாரிய நிறுவனங்களுக்கு சென்று எமது உற்பத்திகளை விற்பனை செய்து வருகிறோம். இங்குள்ள பெருந்தோட்டங்களுக்கு சென்று நாம் தைத்த உடைகளை கடனுக்கு விற்பனை செய்கிறோம். சீட்டு அடிப்படையில் வழங்குகின்றோம்.

வியாபாரமொன்றை செய்யும் போது நாளாந்தம் இடம்பெறக் கூடிய சவால்களுக்கு முகம் கொடுக்க பழகிக் கொள்ள வேண்டும். இலாபமும், நஷ்டமும் ஏற்படும். அதுதான் வாழ்க்கை. இந்த அனைத்துக்கும் மத்தியில் எச்.என்.பி.கிராமின் நிறுவனம் எமக்கு பாரிய சக்தியாக பல வருடமாக எம்முடன் இருந்து வருகிறது. எமது இன்ப துன்பத்தில் பங்கேற்றுள்ளது. நாம் இலாபமடையும் போது உற்சாகமூட்டியது. குடும்பத்தவர், அன்பர்களைப் போன்று கிராமின் நிறுவனம் இப்போது எமது வாழ்க்கையிலும் இணைந்துள்ளது.

ஜெலீலா தனது ஆனந்தக் கண்ணீர் சிந்துமளவுக்கு மகிழ்ச்சியுடன் இவ்வாறு தெரிவித்தார். வாழ்க்கை அவர்களுக்க பல இன்பங்களை பெற்றுக் கொடுத்துள்ளது. உண்மையாளர்களினால் மன நம்பிக்கையுடனும் தைரியமாகவும் தொழிலில் ஈடுபட்டு வருகிறார். ஆனால், அவர் பெற்ற அனுபவத்தை மீண்டும் மீண்டும் ஞாபகப்படுத்தி திருப்தியடைகிறார். அந்தளவுக்கு சந்தோஷமாக கடந்த கால வாழ்க்கையையும், நவீன காலத்தையும் கழித்துக் கொண்டிருப்பதற்கு நாம் அவருக்கு மகுடம் சூட்ட வேண்டுமென்றால் அது மிகையாகாது.

ஆக்கம்
மஞ்சுள ஹெட்டியாராச்சி
படம்: லக்ஷ்மன் குமாரதுங்க





# உபாலி... கள்வனைப் பிடிக்க நான்கு மணிநேர போராட்டம் முன்னெடுக்கப்பட்டது...

## உபாலி ஜயசிங்க
## குருநாகல் கிளை முகாமையாளர்

### உங்களுக்கு தெரியாத நான்

**முழுப் பெயர்:** திஸாநாயக்க முதியான்சலாகே அஜித் உபாலி ஜயசிங்க

**பிறந்த திகதி :** 1982.04.25

**உங்களுக்கு பிடித்த பாடசாலை:** நான் கல்கொல கனிஷ்ட வித்தியாலயத்தில் ஆரம்ப கல்வியைக் கற்றேன். தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற பின்னர் பின்னவலை தேசிய பாடசாலையில் கல்வி கற்கும் வாய்ப்பு கிடைத்தது. உயர்தரம் வரை நான் அந்தப் பாடசாலையில் கல்வி கற்றேன். இன்றும் நான் ஆரம்பக் கல்வியை கற்ற கல்கொல கனிஷ்ட வித்தியாலத்திற்கே அதிக விருப்பம். சிறிய வளங்கள் பற்றாக்குறையான அந்தப் பாடசாலையில் மொத்தமாக 80 மாணவர்கள் மாத்திரமே கல்வி கற்றனர். ஏழு ஆசிரியர்கள் கடமையாற்றினார்கள். எமது வீட்டில் இருந்து இரண்டு கிலோமீற்றர் தூரத்தில் பாடசாலை அமைந்திருந்தது. பாடசாலைக்கு நாங்கள் நடந்தே சென்றோம். அந்த வீதியில் பஸ்கள் இல்லை. தூரத்தில் இருந்து பாடசாலைக்கு வரும் ஆசிரியர்கள் பாடசாலைக்கு திரும்பும் வழியில் இறங்கி எங்களுடன் ஒன்றாக நடந்து வருவார்கள். மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் இடையில் நல்லதொரு நட்பு காணப்பட்டதுடன் மகிழ்ச்சியான சிறு பராயத்தை நான் இன்றும் நினைத்துப் பார்க்கிறேன்.

**பாடம்:** சிங்களம்

**விளையாட்டு:** கால்பந்து, பல வருடங்களாக பாடசாலையின் கால்பந்து அணியில் உப தலைவராக செயற்பட்டேன். 1999ஆம் ஆண்டு நடைபெற்ற அகில இலங்கை மைலோ கால்பந்துப் போட்டியில் எமது பாடசாலை இரண்டாமிடத்தைப் பெற்றுக் கொண்டது.

**பாடசாலைக்காலத்தில் எதிர்கால இலட்சியம்:** எனது தந்தை தேங்காய் விற்பனையில் ஈடுபட்டு வந்தார். நான் சிறுவனாக இருந்த போது எமது குடும்பம் பொருளாதார ரீதியில் பல்வேறு சிரமங்களுக்கு முகம் கொடுத்ததை நான் அறிவேன். அம்மா, அப்பா, அண்ணன், நான், தம்பி ஆகியோர் அந்த சிறு வருமானத்தையே பெற்று வாழ்க்கை நடத்தினோம். ஒரு சில சந்தர்ப்பங்களில் நாங்கள் செருப்பு இல்லாமல் பாடசாலைக்கு சென்ற காலமும் உண்டு. என்றாவது ஒரு நாள் நான் நல்ல தொழில் ஒன்றின் மூலம் எமது குடும்ப பொருளாதாரத்தை உயர்த்த முடியுமென்ற கனவு அக்காலப்பகுதியில் காணப்பட்டதுடன் அந்த ஒரே இலக்கை அடைவதற்காக படிப்பில் கவனம் செலுத்தினேன். நான் சாதாரண தரத்தில் நல்ல பெறுபேற்றை பெற்று உயர்தரத்தில் பௌதீக விஞ்ஞானத்தை தெரிவு செய்தது எதிர்காலத்தில் வைத்தியராக வரவேண்டுமென்பதாகும்.



குழந்தைப் பருவத்தில்

**முதல் தொழிலுடன் உங்களுக்கு பிடித்த தொழில் பற்றி:** நான் ஆரம்பத்தில் செலின்கோ இன்சூரன்ஸ் நிறுவனத்தில் விற்பனை ஊக்குவிப்பு அதிகாரியாக கடமையாற்றினேன். அது 2002-2004 காலப்பகுதியாகும். எனது உற்ற நண்பனான மாதனவின் வழிகாட்டலின் கீழ் கிராமின் நிறுவனத்தில் இணைந்து கொண்டேன். கிராமின் நிறுவனத்தில் தொழில் புரிவதை பாக்கியமாக கருதுகிறேன். இந்தத் தொழிலின் மூலம் ஒருவருக்கு உதவி செய்கிறோம் என்ற காரணத்துக்கு அப்பால் மற்றொரு காரணமும் இருக்கிறது. அதாவது, கிராமின் நிறுவனம் எம்முடன் அந்நியொன்யமாக செயற்படுவதலாகும். ஒருவருக்கு ஒருவர் உதவி செய்வதுடன், மற்றவர்களின் துன்பத்தில் பங்கெடுப்பதும் ஆரம்பத்தில் இருந்து எம்மிடையே காணப்படுகிறது. எனினும் அண்மைக்காலமாக இந்த விடயங்கள் எம்மைவிட்டு செல்கின்றதா என்று சந்தேகிக்கும் நிலையும் தோன்றியுள்ளது.

ஆக்கம்
மஞ்சுள ஹெட்டியாராச்சி

**கிராமின் வாழ்க்கையில் மறக்க முடியாத சம்பவம்:** ஒரு தடவை நாம் தலைமைக்காரியாலய பணிப்பின் பேரில் நுவரெலியா கிளைக்கு விசிட் செய்தோம். அந்த சந்தர்ப்பத்தில் என்னுடன் சென்ற இருவரின் பணம் களவாடப்பட்ட செய்தி கிடைக்கப்பெற்றது. அந்த செய்தியை கேட்ட எமது நண்பர்கள் எட்டு பேருக்கு மேல் பைசிக்களில் மாலை நான்கு மணியளவில் நுவரெலியாவுக்கு வருகை தந்து சம்பவம் இடம்பெற்ற பகுதியில் சோதனை செய்தனர். இதன்போது கள்வர்கள் அடையாளம் காணப்பட்டு கையும் மெய்யுமாக பிடிபட்டனர். இந்த சம்பவம் பாரியதொரு சம்பவம் என்பதை பின்னர் அறிந்து கொண்டதுடன் மிகவும் துணிச்சலுடன் அந்தக் கள்வர்களை துரத்திப் பிடித்தமை என்றும் மறக்க முடியாது.

**வாழ்க்கையில் மிகவும் மகிழ்ச்சியான தினமும், துக்க தினமும்:** 2015 ஜனவரி மாதம் 05ஆம் திகதி எனது மகன் சசேத் கல்கென திஸாநாயக்க பிறந்த தினம் வாழ்க்கையில் மகிழ்ச்சியான தினமாகும். அவ்வாறே, எனது அன்பிற்குரிய அப்பா 2005ஆம் ஆண்டு பெரலைஸ் நோயினால் பாதிக்கப்பட்டமை துக்க தினமாக கருதுகிறேன்.

**கடந்த காலத்துக்கு செல்வதற்கான வாய்ப்பு கிடைத்தால் வாழ்க்கையில் தேர்ந்தெடுக்கும் சிறந்த காலமும் அதற்கான காரணமும்:** உயர்தரம் கற்ற காலப்பகுதி. அந்தக் காலப்பகுதியில் நான் விளையாட்டுத்துறையில் ஆர்வமாக கலந்து கொண்டேன். இதனால், கல்வியில் கவனம் செலுத்துவது குறைவாகவே இருந்தது. இதனால், மீண்டும் கடந்த காலத்துக்கு செல்வதற்கான வாய்ப்பு கிடைத்தால் என்னால் அக்காலத்தில் செய்யாதவற்றை செய்ய முயற்சிப்பேன்.



**கடமையில் கவனத்தை செலுத்தும் போது நேரம் செல்வது தெரியாது.**

# நாம் எம்மை எவ்விதம் அடையாளம் காண்பது.....?

## பகுதி 1

டெல்கானாவின் HOW TO WIN FRIENDS & INFLUENCE PEOPLE என்ற நூலின் தமிழாக்கம்

சுயவிருத்தி (SELF DEVELOPMENT) தொடர்பாக உலகின் முதலாவது நூலாக கருதப்படுவது டெல்கானாவின் HOW TO WIN FRIENDS & INFLUENCE PEOPLE என்ற நூலாகும். இந்த நூல் 1937ஆம் ஆண்டு வெளியிடப்பட்டதுடன் சுமார் 34 மொழிகளில் அச்சிடப்பட்டுள்ளது. நூல் வெளியிடப்பட்ட நாள் முதல் இன்று வரை சுமார் 78 ஆண்டுகள் கழிந்துள்ள போதிலும் மக்கள் மத்தியில் இன்றும் பிரசித்திபெற்ற நூலாக காணப்படுகின்றது. இந்த நூலின் பிரதிகள் 20,000,000 வரை வெளியிடப்பட்டுள்ளதுடன் உலகின் பல நாடுகளிலும் விற்பனை செய்யப்பட்டுள்ளன. டெல்கானா 1955ஆம் ஆண்டு மரணமானார். அவரினால் படைக்கப்பட்ட இந்த நூல் மக்களின் உள்ளங்களை வெற்றி கொண்டதுடன் எவ்விதம் மக்கள் சுயமாக விருத்தியடைவது என்பது தொடர்பாக மிகவும் ஆக்கப்பூர்வமான பல விடயங்கள் இந்தப் புத்தகத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன.



நிவ்யோர்க் நகருக்கு 1931 மே மாதம் 7ஆம் திகதி விசேட தினமாகும். சமாதானத்துக்கு பெயர்போன இந்நகருக்கு துஷ்பிரயோகங்கள் பலவற்றில் ஈடுபட்டிருந்த லுடுகன் குரோலிட் என்ற கொள்ளைக்காரன் பொலிஸாரால் மடக்கிப் பிடிக்கப்பட்ட தினமாகும். அந்த சந்தர்ப்பத்தில் நிவ்யோர்க் வெஸ்டர்ன் பிரதேசத்தில் தனது காதலியின் வீட்டில் இருக்கும் போதே பிடிபட்டான்.
லுடுகன் குரோலிட்டை கைது செய்வதற்கு பொலிஸார் பாரிய தியாகங்களை செய்ய வேண்டியேற்பட்டது. அந்த மாடி வீட்டின் பல பகுதிகளிலும் 150இற்கும் மேற்பட்ட முகமூடி அணிந்த பொலிஸாரும் இரகசிய பொலிஸாரும் குழுமியிருந்தனர். இதற்கு மேலதிகமாக கட்டிடத்துக்கு அருகாமையில் உள்ள வீடுகளிலும் துப்பாக்கி ஏந்தியவாறு பொலிஸார் நிறுத்தப்பட்டிருந்தனர். ஏனெனில் அவன் தப்பித்துவிடக்கூடாது என்பதற்காக. முதலில் காதலியின் வீட்டுக் கூரைக்கு மேல் ஓர் ஓட்டையைப் போட்டு தண்ணீர்புகையை செலுத்தினர். இதனால் கோபமடைந்த குரோலி பொலிஸாரை நோக்கி துப்பாக்கி பிரயோகம் செய்தான். பொலிஸார் வீட்டின் உள்ளே புகுந்து மெசின்கன் மூலமாக அவனை நோக்கி துப்பாக்கி பிரயோகம் செய்தனர்.
கொள்ளைக்காரனுக்கும் பொலிஸாருக்கும் இடையில் சுமார் ஒன்றரை மணித்தியாலம் வரை இடம்பெற்ற இந்தப் போராட்டத்தை நிவ்யோர்க் நகரத்தின் நாலா பாகங்களிலும் உள்ள பல்லாயிரக்கணக்கான மக்கள் பார்த்துக் கொண்டிருந்தனர்.
இறுதியில் லுடுகன் குரோலிட் வசமாக மாட்டிக் கொண்டான். நிவ்யோர்க் நகர வரலாற்றில் மிகவும் கொடிய கொள்ளைக்காரனை கைது செய்துள்ளதாக குற்றவாளிக் கூண்டில் குரோலிட்டை நிவ்யோர்க் நகர பொலிஸ் ஆணையாளர் அறிமுகப்படுத்தினார். எனினும் குரோல் தன்னை அவ்வாறு அறிமுகம் செய்யவில்லை. தமது வீட்டுக்கு பொலிஸார் தொடர்ச்சியாக துப்பாக்கிப் பிரயோகம் செய்து கொண்டிருந்த போது தாம் நாற்காலியில் அமர்ந்து கொண்டு மேசையில் வைத்து கடிதமொன்றை எழுதிக் கொண்டிருந்ததாக தெரிவித்தான். பொலிஸாரின் துப்பாக்கி பிரயோகத்தால் வலது கையில் குண்டுபட்டு இரத்தம் ஒழுகிக்கொண்டிருந்தது.
"இந்தக் கடிதத்தினைப் பார்த்து யாரும் அறிந்து கொள்ள முடியும்"
குரோலி தமது கடிதத்தில் இவ்விதம் தெரிவித்திருந்தான். எனது கோடி ஆத்மாவுக்கு உள்ளே அதிகளவில் மனமுடைந்த உள்ளமே காணப்படுகிறது. அதற்கு பல காரணங்கள் உள்ளன. எனினும் இந்த உளைச்சல் ஒரு போதும் யாரையும் எதுவும் செய்யாது. இந்த சம்பவத்துக்கு சற்று முன்னர் குரோலி அமெரிக்காவின் லோனக் அய்கண்ட் பிரதேசத்தில் இருந்தான். தனது அன்புக் காதலி சமோகியுடன் ஒன்றாக இருக்க வேண்டுமென்பதற்காக அந்தப் பிரதேசத்தின் குறுக்கு வீதியில் பயணித்துக் கொண்டிருந்த போது இடைநடுவில் பொலிஸார் அவனுடைய வாகனத்தை நிறுத்துமாறு சைகை செய்தனர். "உன்னுடைய லைசனை காட்டு" என்று பொலிஸ் உத்தியோகத்தர் காரில் இருந்த குரொலியிடம் கேட்டார். எதுவும் பேசாத குரோலி தனது பையில் இருந்த துப்பாக்கியை எடுத்து பொலிஸாரை நோக்கி சுட்டான். பொலிஸார் அந்த இடத்திலேயே உயிரை விட்டார். அதன் பின்னர் குரோலி காரில் இருந்து இறங்கி வெளியே வந்தான். இரத்தம் படிந்து மரணமடைந்த நிலையில் கீழே விழுந்துகிடந்த பொலிஸ் உத்தியோகத்தரின் ரிவோல்வரை எடுத்து மீண்டுமொறு முறை சுட்டான்.
இவ்விதம் கொலை செய்த சில மணித்தியாலங்களுக்கு பின்னரே எனது கோடி ஆத்மாவுக்கு உள்ளே அதிகளவில் மனமுடைந்த உள்ளமே காணப்படுகிறது என்று கடிதத்தில் எழுதினான். அதற்கு பல காரணங்கள் உள்ளன. எனினும் இந்த உளைச்சல் ஒரு போதும் யாரையும் எதுவும் செய்யாது. குரோலியை மின்சார நாட்காலியில் வைத்து கொல்லுமாறு பணிக்கப்பட்டது. இந்த சம்பவம் நிவ்யோர்க்கின் சின்க் சின்க் சிறைச்சாலையில் இடம்பெற்றது. "நான் மனிதரை கொன்ற ஒரே காரணத்திற்காகவே இவை அனைத்துக்கும் இடம்பெறுகிறது" "மரண தண்டனை நிறைவேற்றுவதற்காக குரோலி சின்க் சிறைச்சாலைக்கு அழைத்து வரப்பட்ட போது, மரண தண்டனை நிறைவேற்ற இருக்கும் ஒரு சில வினாடிகளின் போது அவ்வாறு கூறியிருக்கலாம் என்று கருதலாம். எனினும் குரோலி அங்கு தெரிவித்ததாவது நீங்கள் கனவில் கூட கேட்டிருக்கமாட்டீர்கள். நான் கொள்ளைக்காரனாக மாறியதன் மூலம் நான் என்னையே அழித்துக் கொண்டுள்ளேன். என்பதாக கூறினான். இந்த சம்பவத்தின் மூலம் நாம் கற்றுக் கொண்ட பாடம் என்ன? குரோலி தான் செய்த அனைத்தையும் ஏற்றுக் கொண்டான். அவன் குற்றவாளி அல்ல என்று ஒருபோதும் கூறவில்லை. தான் குற்றமற்றவர் என்று மரணத்தறுவாயில் கூட தெரிவிக்கவில்லை. இதன் மூலம் பிழைகள் ஏற்படுவதை வாழ்க்கையில் எந்த சந்தர்ப்பத்தில் ஏற்றுக் கொள்ள வேண்டும். அதனைவிட்டு நாம் பிழை செய்யவில்லை என்பதாக முரண்டுபிடிக்கக் கூடாது.

இதுவும் அமெரிக்காவில் வாழ்ந்த மற்றுமொரு குற்றவாளி தொடர்பான கதையாகும்.
எல்கெபோன் . . . சிக்காக்கோ நகரில் வாழ்ந்த அமெரிக்க வரலாற்றில் மிகவும் கொடிய "மக்களில் கொடியவன்" என்ற பட்டத்தைப் பெற்றுக் கொண்ட நபராகும். பிரபல குற்றச் செயல்களுடன் தொடர்புடைய குழுவின் தலைவரான அவன் சிக்காக்கோ நகரில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் பலியானான். "மக்கள் என்றும் சந்தோசமாக இருக்க வேண்டுமென எண்ணியதே எனது வாழ்நாளில் சிறந்த காலமாகும். அவர்கள் மகிழ்ச்சியாக இருப்பதற்கு உதவி செய்ய செய்ய வேண்டும். இதற்காகவே நான் குற்றாவாளியானேன். நான் பொலிஸாருக்கு வேண்டப்பட்டவனானேன். அமெரிக்காவின் மிகவும் கொடிய மனிதன் என்ற பட்டப்பெயரை கொண்ட எல்கெபோன் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் தன்னை கெட்டவன் என்று நினைக்கவில்லை. தான் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் சமூகத்துக்கு நன்மை அல்லது சேவையொன்றை பெற்றுக் கொடுத்து மக்களுக்கு நலன்புரி சேவைகள் செய்ய வேண்டுமென்றே கருதினான். எனினும் எல்கெபோன் சிந்தித்த கருத்துக்களை அமெரிக்க மக்கள் ஏன் ஏற்றுக் கொள்ளவில்லை என்பது இன்றும் புதிராக காணப்படுகிறது.

வாசனா லியனாராச்சி

# அபிலாஷ

## "நான் எதிர்பார்த்ததை விட குறுகிய காலத்தில் அபிலாஷ கடனைப் பெற்றுக் கொள்ள எனக்கு முடிந்தது ..."

பைட் உற்பத்தியில் அதிகளவானர்கள் ஈடுபடும் கைத்தொழில் என்று கூறினால் பிழையென்று கூற முடியாது. குழந்தைகள் முதல் பெரியோர்கள் வரை விரும்பி உண்ணும் உணவாக காணப்படுவதால் சந்தையில் நல்ல கிராக்கியும் இந்தத் தொழிலுக்கு காணப்படுகிறது. "உற்பத்தி செய்யும் அளவுக்கு விற்பனை செய்ய முடியும்" இந்த பைட் உற்பத்தியில் ஈடுபடும் வியாபாரிகள் தெரிவிக்கும் பொதுவான கருத்தாகும். கரதிமுல்ல குருதலாவையை பிறப்பிடமாகக் கொண்ட கிச்சில் மொஹமட் பாரூக் த பைட் உற்பத்தியில் சிறப்பாக ஈடுபடும் முயற்சியாளராகும்.

"இருபத்து நான்கு வருடமாக இந்தத் தொழிலில் ஈடுபட்டு வருகின்றேன். மிக்ஸர், கடலை, பொரி, சீனி முருக்கு போன்ற பைட் வகைகள் இப்போது உற்பத்தி செய்யப்படுகின்றன. சிபானா என்ற பெயரில் எமது தொழிலை சிறப்பாக முன்னெடுத்துச் சென்றாலும் எனது மனைவி நோய்வாய்ப்பட்டு அந்த நோயில் இருந்து காப்பாற்றுவதற்கு அதிகளவான பணம் செலவிடப்பட்டது. இதனால் எனது வியாபாரம் பாரிய அளவில் நஷ்டத்தை எதிர்நோக்க வேண்டியேற்பட்டது. எனது மனைவி கிராமின் நிறுவனத்தில் அங்கத்தவராக இருந்தாலும் கிராமின் நிறுவன கடன் கட்டமைப்புக்கு ஏற்ப ஒரே தடவையில் கூடுதலான பணத்தை கடனுக்கு எடுக்க முடியாது. ஏனெனில் வியாபாரம் நட்டத்தில் இயங்கிக் கொண்டிருக்கும் போது அதனை நல்ல நிலைமைக்கு கொண்டு பாரிய அளவு நிதி தேவைப்பட்டது. அந்த சந்தர்ப்பத்தில் எச்.என்.பி.கிராமின் "அபிலாஷ" கடனை எடுப்பதற்கு நான் தீர்மானித்தேன். நான் எதிர்பார்த்ததை விட குறுகிய காலத்தில் அபிலாஷ கடனைப் பெற்றுக் கொள்ள முடிந்தது. எமது உற்பத்திகளை கொண்டு செல்வதற்கு சிறிய லொறி ஒன்றும் மோட்டார் சைக்கிள் ஒன்றும் காணப்படுகிறது. எம்மிடம் இருவர் தொழில்புரிகின்றனர்.

**கிச்சில் மொஹமட் பாரூக்**
**கரதிமுல்ல, குருதலாவை**



## அட்டைப்பட விளக்கம்

### எச்.என்.பி.கிராமின் நிறுவனத்தின் இந்த வேலைத்திட்டம்
# எமது வாழ்க்கையை முன்னேற்றுவதற்கான பின்புலமாகும்...




வாழ்க்கையில் மகிழ்ச்சியை ஏற்படுத்தும் மலர், வியாபாரத்திலும் செழிப்பினை ஏற்படுத்தினால் வாழ்க்கை சந்தோஷமாக அமைவதுடன் பணம் சம்பாதிப்பதும் இலகுவான விடயமாக மாறிவிடும். அவ்வாறே தாம் வாழும் பிரதேசத்தின் காலநிலையை தமக்கு சாதகமாக பயன்படுத்தி பூ வளர்ப்பின் ஊடாக வாழ்க்கையில் வெற்றி பெற்ற பெண்ணாக மஞ்சுளா தில்ருக்ஷியை நாம் அடையாளப்படுத்த முடியும். தனது கணவருடன் இணைந்து சுமார் எட்டு வருடங்களுக்கு முன்னர் தனது வீட்டுத் தோட்டத்தில் ஆரம்பிக்கப்பட்ட பூ வளர்ப்பு இன்று பாரிய விருட்சமாக தனது தொழில் முயற்சியை விருத்தி செய்யும் அளவுக்கு மஞ்சுளா மாற்றமடைந்துள்ளார். எச்.என்.பி.கிராமின் நிறுவன பங்களிப்புடன் அவருடைய தொழில் வெற்றி தொடர்பில் மஞ்சுளா எம்மிடம் தெரிவித்த கருத்துக்களை கீழே தருகின்றோம்.

"முதன் முதலாக எங்களுடைய வீட்டுத்தோட்டத்தின் இருபது பேர்ச்சஸ் பரப்பளவில் நாங்கள் பூ வளர்ப்பில் ஈடுபட்டோம். ஆரம்பத்தில் வாசனை ரோஜா பூக்கள் போன்றவற்றையே வளர்த்தோம். வியாபாரத்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போது எமது தொழிலை முன்னேற்றுவதற்கான போதியளவு பணவசதி எம்மிடம் இருக்கவில்லை. இதனால் எமக்கு கடன் எடுக்க வேண்டியிருந்தது. வங்கியில் சென்று கடன் எடுப்பதற்கு பல விண்ணங்களை பூர்த்தி செய்ய வேண்டுமென்பதால் அந்த முயற்சியை அவ்வாறே கைவிட்டோம். இந்த சந்தர்ப்பத்திலேயே எமக்கு கிராமின் நிறுவனம் தொடர்பில் அறிய முடிந்தது. பிணையாளர்கள் இன்றி இலகுவாக கடனை கிராமின் நிறுவனத்தில் பெற்றுக் கொள்ள முடியுமென்பதால் நாம் கடனைப் பெற்றோம். பூ வளர்ப்பினை விருத்தி செய்வதற்கு தற்போது இருக்கும் இடத்தைவிட எண்பது பேர்ச்சஸ் காணியைப் புதிதாக பெற்று அந்த இடத்தில் பூ வளர்ப்பில் ஈடுபட தீர்மானித்து இன்று வரை எமது தொழிலை சிறப்பாக கொண்டு செல்கிறோம். இந்த செயற்பாடுகளுக்கு கிராமின் நிறுவனம் நிதி உதவி செய்தது. வாடிக்கையாளர்கள் எம்மிடம் வருவதால் எமக்கு சந்தைப்படுத்துவதில் எவ்வித சிரமும் இல்லை. இன்று எம்மிடம் மூவர் தொழில் புரிகின்றனர். பூ கன்றுகளை வேறு இடங்களுக்கு கொண்டு செல்வதற்கு எம்மிடம் லொறியொன்று இருக்கிறது.

நாளாந்த வாழ்க்கையில் ஒரு படி முன்னேற்றமடைய அனைவரும் விரும்புகின்றனர். எனினும் அதற்கு கைகொடுப்பதற்கு எச்.என்.பி.கிராமின் போன்ற நிறுவனமொன்று இல்லாமையால் நாட்டில் வறுமையை போக்குவதற்கு முடியாமல் உள்ளது. எச்.என்.பி கிராமின் நிறுவனத்தின் இந்த வேலைத்திட்டம் எம் போன்றவர்களின் வாழ்க்கையை முன்னேற்றுவதற்கும் பாரிய பின்புலமாக இருக்கிறது.

எச்.எம். மஞ்சுளா தில்ருக்ஷி
தோரனை சந்தி, கெப்பட்டிபொல.



# சித்திரக் கலை நண்பர்கள்

## சிறுவர்களின் கைவண்ண பகுதி

"சித்திர கலை நண்பர்கள்" வரைதல் பகுதி எச்.என்.பி. கிராமின் உத்தியோகத்தர்களுக்கானது என்பதுடன் உங்கள் பிள்ளைகளின் படைப்புகள், ஆக்கங்களை பிரசுரிக்கும் நோக்கில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. "சித்திர கலை நண்பர்கள்" பகுதியில் பிரசுரிக்கப்படும் சிறந்த மூன்று படைப்புகளுக்க பரிசில்கள் வழங்குவதற்கு தீர்மானித்துள்ளதுடன் உங்கள் பிள்ளைகளின் ஆக்கங்களை, படைப்புகளை பிரசுரித்து இதன் அனுகூலங்களை பெற்றுக் கொள்ளுங்கள். உங்கள் பிள்ளைகளின் படைப்புகளை பதிப்பாசிரியர், கைவண்ணப்பகுதி, எச்.என்.பி.கிராமின் கட்டிடம், இல. 168, நாவல வீதி, நுகெகொடை என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.



கம்மடு ஓவியம்
எஸ்.எம்.லஹிரு நிர்மால்
தரம் 8
(எஸ்.எம்.மகேஷ் உதய
அம்பலாங்கொடை)



கிராமத்தின் தோற்றம்
சிதும் ஆலொக பெர்ணாந்து
தரம் 5
(ருவன் பெர்ணாந்து
தலைமையகம்)



பட்டம் விடும் சிறுவர்கள்
மெதாயா ஹிமந்தி பெரேரா
வில்ஸ்டன் சர்வதேச பாடசாலை
தரம் 1
(சுதேஷ் பெரேரா
தலைமையகம்)



எனது வீட்டுத்தோட்டம்
எம்.ரி. உதுல் புத்மின தந்திரிகே
மாமிபே கனிஷ்ட வித்தியாலயம்
தரம் 1
(புத்திக தந்திரிகே, தலைமையகம்)



எனது தோட்டம்
எஸ்.எம். நிதினி தினேத்மா
தரம் 04
(எஸ்.எம்.மகேஸ் உதய
அம்பலாங்கொடை)



எனது குடும்பம்
மினுதி மந்துலி எதிரிசிங்க
தர்மசோக மகா வித்தியாலயம்
தரம் 01
(எம்.பீ. எதிரிசிங்க, அம்பலாங்கொடை)


## புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற சிறுவர்கள்

2015ஆம் ஆண்டு நடைபெற்ற புலமைப்பரிசில் பரீட்சையில் வெட்டுப் புள்ளியைப் பெற்று சித்திபெற்ற மாணவ, மாணவர்களின் பெற்றோர் எமது காரியாலயங்களில் தொழில் புரிகின்றனர். அவர்களின் பிள்ளைகளில் சித்திபெற்ற மாணவர்கள் தொடர்பான தகவல்களே இங்கு குறிப்பிடப்பட்டுள்ளன.

**மாணவ... மாணவிகளே... நீங்கள் அனைவரும் உங்களின் கல்விச் செயற்பாடுகளில் தொடர்ந்தும் அதிக கவனம் செலுத்தி சிறந்த பெறுபேற்றை பெறுவதற்கு எச்.என்.பி. கிராமின் உங்களை வாழ்த்துகிறது.**



**பீ.என். சதீஸக நிம்ஷான் பெர்ணாந்து**
**சுட்டெண் : 2919176**
**பெற்ற புள்ளிகள் : 160**
பெற்றோர் :
பீ. சம்பத் பெர்ணாந்து
புத்தளம் கிளை



**எஸ். சிதும் ஆலொக பெர்ணாந்து**
**சுட்டெண் : 1526928**
**பெற்ற புள்ளிகள் : 165**
பெற்றோர் :
எஸ்.ஏ. ருவன் பெர்ணாந்து
தலைமைக்காரியாலயம்




**ஏ. ரொக்ஷிகா**
**சுட்டெண் : 4144465**
**பெற்ற புள்ளிகள் : 155**
பெற்றோர் :
கே. அன்டனி ஜயராஜ்
தலைமைக்காரியாலயம்

**நீங்கள் குற்றவாளியில்லையெனில் மற்றவர்கள் கூறுவதை பொருட்படுத்த தேவையில்லை.**



நாளாந்த வியாபார அலுவல்களின் போது காசோலைகளைப் பயன்படுத்தி நடைமுறைக் கணக்கின் ஊடாக கொடுக்கல் வாங்கல்களை செய்வது எமது நிறுவனத்தின் பிரதான செயற்பாடாகும். அவ்வாறே இங்கு வெளிப்படைத் தன்மையைப் பேணி சரியாகவும் கவனமாகவும் கையாள்வது உயர் முகாமைத்துவம் முதல் சகல முகாமையாளர்களுக்கும் பிரதான ஒன்றாக காணப்படுவதுடன் தீர்மானம் எடுப்பதும் நிதி கையாள்கை செய்வதற்கும் இந்த செயற்பாடுகள் பாரிய உதவி புரிகின்றன. அவ்வாறே எமது நிறுவனத்தினால் கணக்காய்வு செய்யும் வெளியக மற்றும் உள்ளக கணக்காளர்களுக்கும் நிறுவனத்தின் புலனாய்வு பிரிவினருக்கும் (Investigation Department) குறித்த கிளை கணக்கின் வெளிப்படைத் தன்மை மற்றும் முறைகள் தொடர்பில் தீர்மானம் எடுப்பதற்கு இந்த வங்கி கணக்கிணைக்கக் கூற்று (Bank Reconciliation Report) பாரிய உதவியாக இருக்கும்.

## - பகுதி 01 -




# வங்கி கணக்கிணைக்கக் கூற்று (Bank Reconciliation Report)

➢ வங்கி கணக்கிணைக்கக் கூற்று

வங்கி கணக்கிணைக்கக் கூற்று என்பது வியாபார செயற்பாடுகளில் வங்கிக் கணக்கின் மீளாய்வு மிகுதி அறிக்கையும், வங்கிக் கூற்று அறிக்கையும் இணக்கம் ஏற்படாத போது அதற்கான காரணத்தை விளக்கும் அறிக்கையே வங்கி கணக்கிணைக்கக் கூற்று எனப்படும்.

➢ வங்கி கணக்கிணைக்கக் கூற்று தயாரிக்கப்பட வேண்டியதற்கான காரணம்

வங்கிக் கணக்கின் மிகுதியை சரிபார்த்த பின்னர் வங்கிக் கணக்கின் மிகுதி மற்றும் வங்கி கூற்றின் மிகுதியும் (Bank statement) இணக்கம் ஏற்படாத சந்தர்ப்பத்தில் அதனை மீளாய்வு செய்வதற்காக வங்கி கணக்கிணைக்கக் கூற்று தயாரிக்கப்பட வேண்டும். இதற்கு மேலதிகமாக வங்கி கணக்கிணைக்க அறிக்கையில் மீளாய்வு செய்ய வேண்டிய விடயங்கள் கீழே தரப்பட்டுள்ளது.

01. காசோலைகள் மூலம் நடைபெற்ற மோசடி மற்றும் முறைகேடுகள் ஆகியவற்றை ஆராய்ந்து பார்த்தல்
02. வங்கியினால் இடம்பெற்ற பிழைகளை ஆராய்ந்து அதனை சரிசெய்யுமாறு அறிவித்தல்
03. கணக்காய்வு செயற்பாடுகளுக்காக பயன்படுத்தல்

➢ வங்கிக் கூற்று **(Bank statement)**

வங்கியானது தனது நடைமுறைக் கணக்காளர்களுக்கு வங்கியின் ஊடாக இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல் பற்றிய நடைமுறைக் கணக்கு விபரங்களை தொகுத்து மாதாந்தம் அனுப்பும் அறிக்கையினையே வங்கிக் கூற்று என்று அறிமுகம் செய்ய முடியும்.

➢ வங்கிக் கூற்றில் பின்வரும் விடயங்கள் குறிப்பிடப்பட்டிருக்கும்

★ நடைமுறைக் கணக்கின் ஆரம்ப மீதியும், இக்காலப்பகுதிக்கான இறுதி மிகுதி. (Opening & Closing Balance)
★ வாடிக்கையாளர் அல்லது வேறு நபர்களினால் நடைமுறைக் கணக்கில் வைப்பிலிட்ட பணம்.
★ நடைமுறைக் கணக்கில் வைப்பிலிடப்பட்ட காசோலைகள். (Cheque Deposits)
★ நடைமுறைக் கணக்கின் ஊடாக செலுத்தப்பட்ட மற்றும் வழங்கப்பட்ட காசோலைகள்.
★ நிறுத்தி வைத்தலுக்காக வங்கியினால் வாடிக்கையாளரிடம் இருந்து அறவிடப்பட்ட தொகை. (Standing Order)
★ வங்கியினால் அறவிடப்பட்ட பணம், வங்கி வட்டி, காசோலை புத்தக பணம், கழிவு மற்றும் நடைமுறைக் கணக்கு வங்கிக் கட்டணங்கள் (Bank Charges)



**சந்தகெலும் ஜயதுங்க,**
கணக்காளர்,
எச்.என்.பி. கிராமின்
பைனான்ஸ் லிமிட்டெட்.

7ஆம் பக்கத் தொடர்ச்சி

**வாழ்க்கையில் இழந்த பெறுமதி மிக்க நபர் அல்லது சந்தர்ப்பம்:**
எனது முதல் பிள்ளை கருவரையில் இருக்கும் போதே இறந்து விட்டது. அந்த சந்தர்ப்பம் எனது மனைவியின் வாழ்க்கையையே கேள்விக்குரியாக்கிவிடும் என்று கருதினேன். அந்தப் பிள்ளையின் இழப்பு இன்றும் எனது மனதில் இருக்கிறது.

**சரி செய்ய வேண்டுமென நினைக்கும் ஏதேனும் விடயங்கள் இருப்பின்:**
நான் மற்றவர்களை அதிகமாக நம்புகிறேன். இதனால் பல தடவைகள் ஏமாற்றமடைந்துள்ளேன். மற்றது எனக்கு முன்கோபம் இருக்கிறது. இதனை கட்டுப்படுத்துவதற்கு பல்வேறு முயற்சிகளை செய்து வருகிறேன்.

**நீங்கள் எதிர்பார்ப்பது போன்று உங்கள் திறமைகளை முழுமையாக தொழிலில் பயன்படுத்துகிறீர்களா?**
தொழில் முயற்சிகளை வெற்றிகரமாக முன்னெடுக்கும் திறமை என்னிடம் காணப்படுகிறது. எனது தந்தை நோயக்கு உள்ளாகிய பின்னர் நான் தரம் ஏழு, எட்டு படிக்கும் போதே எமது கடைக்கு தேவையான தேங்காய், தெம்பிலி போன்றவற்றை கிராமங்களில் இருந்து வாங்கி வந்து விற்பனை செய்துள்ளேன். சரியாக கணக்குகள் தெரியாத அந்தக் காலப்பகுதியிலும் கணக்குப் புத்தகங்களில் எழுதிக் கொண்டு கடையை முன்னேற்றுவதற்கு என்னால் பங்களிப்புச் செய்ய முடிந்தது.

**உங்கள் வாழ்க்கையில் சந்தித்த பெறுமதிக்க நபர், அவரிடம் காணப்படும் அழகிய நற்குணங்கள்:**
எனது அம்மா. நாம் பாரிய பொருளாதார கஷ்டங்களுக்கு முகம் கொடுத்த சந்தர்ப்பத்தில் எனது தாயார் கடைகளிலும், வீடுகளிலும் சமைத்து மாத்திரமின்றி சில காலங்களாக கல் உடைக்கும் தொழிலையும் செய்து எங்களை பராமரித்து வந்தார். அம்மாவின் அயராத உழைப்பும், வாழ்க்கையை தைரியமாக முகம் கொடுத்ததே இன்று நாம் இந்த இடத்தில் இருப்பதற்கு காரணமாகும்.

**உங்களின் முதல் காதல் வாழ்க்கையில் ஏற்படுத்திய மாற்றம்:**
நான் 10ஆம் ஆண்டும் 12ஆம் ஆண்டும் கல்வி கற்றுக் கொண்டிருந்த போது காதல் ஈடுபட்ட அனுபவம் இருக்கிறது. அந்த இரண்டு காதலும் ஒரு தலைக் காதலாக இருந்தது. அதன் பின்னரே எனது மனைவி எனக்கு கிடைத்தார். நாம் இருவரும் உயர்தர வகுப்புகளுக்கு ஒன்றாக சென்றோம். அப்போது எம்மிடையே நட்பு மாத்திரமே இருந்தது. அவர் தாதியர் கல்லூரியில் கல்விக் கற்றுக் கொண்டிருந்த போது எம்மிடையே காதல் மலர்ந்தது. எட்டு வருடமாக காதலித்து நாம் திருமணம் முடித்துக் கொண்டோம்.

**அவரிடம் நீங்கள் காணும் விசேட அம்சங்கள்:** அவள் சுழுது காஞ்சனா. அன்பான மனைவி.

நீங்கள் வாழ்க்கையில் திருப்தியடைகிறீர்களா? நிச்சயமாக. எமக்கென்று நல்லதொரு வீடில்லாமல் நா் இருந்தோம். இரண்டு அறைகள் மாத்திரம் இருந்த அந்த வீட்டில் எம் ஐவரும் நிலத்திலேயே உறங்கினோம். 2006ஆம் ஆண்டு நான் காணியொன்றை வாங்கி 2008ஆம் ஆண்டு வீட்டை நிர்மாணிக்க ஆரம்பித்தேன். 2012ஆம் ஆண்டு அந்த வீடு முற்றாக நிர்மாணிக்கப்பட்டது. 2013ஆம் ஆண்டு வாகனமொன்றை வாங்கினேன். இக்காலப்பகுதியில் எனது 75வீத இலக்கு பூர்த்தியடைந்துள்ளது. இவை அனைத்தும் இந்தத் தொழிலின் மூலமே கிடைக்கப் பெற்றது. இதனால், நான் முழுமையாக திருப்தியடைகிறேன்.

**உங்கள் வாழ்க்கையில் இடம்பெற்ற திருப்பு முனை (Turning point) :**
2004ஆம் ஆண்டு நான் கிராமின் நிறுவனத்தில் இணைந்து கொண்டமை. அப்போது செலிங்கோ காப்புறுதி நிறுவனத்தில் மாதத்தின் சிறந்த பிரதிநிதியாக மூன்று மாதங்கள் தொடர்ந்து தெரிவு செய்யப்பட்டிருந்த காலப்பகுதியாகும். எனினும் கிராமின் நிறுவனத்தில் வாய்ப்பொன்று கிடைத்த போது இரண்டு தடவை சிந்திக்காமல் நான் கிராமின் நிறுவனத்தை தெரிவு செய்தமையாகும்.

**உங்களுக்கு பிடித்த பாடகர்:** கசுன் கல்ஹார
**பிடித்த பாடல் :** கசுன்கே மல மிடக் தியன் ஒப அதே . .
**திரைப்படம் :** ஆங்கில எக்ஸன் திரைப்படங்களை விரும்பி பார்ப்பேன்
**நாவல்:** சிந்தா லக்ஷ்மி அவர்களினால் சிங்களத்துக்கு மொழிபெயர்த்த “அரணகட பெம்பெந்த”

**அச்சம், சந்தேக உணர்வு ஆகியன நம்பிக்கையின்மைக்கான காரணங்களாகும்.**



# வாழ்க்கைக்கு சட்டம்

## உங்கள் வாகனம் ஏதேனும் அனர்த்தங்களுக்கு முகம் கொடுக்கும் போது



நாளாந்தம் வாகனங்களில் தொழிலுக்கு செல்லும் உங்களுக்கு வீதி விபத்துகளுக்கு முகம் கொடுக்க வேண்டிய சந்தர்ப்பங்கள் உருவாகலாம். இடைநடுவில் இவ்வாறான அனர்த்தங்கள் ஏற்பட்டால் நீங்கள் கடைபிடிக்க வேண்டிய முறைகள் தொடர்பில் போதிய அளவு அறிவு காணப்பட்டால் நீதித்துறையில் இடம்பெறக்கூடிய அநாவசிய தலையீடுகளை ஓரளவாவது கட்டுப்படுத்திக் கொள்ள உங்களுக்கு முடியும். வாழ்க்கைக்கு சட்டம் தொடர்பில் இங்கு நாம் கலந்துரையாட உள்ளோம்.

இங்கு தாக்கம் செலுத்துவது 1948ஆண்டின் 40ஆம் இலக்க மோட்டார் வாகன சட்டத்தின் 161ஆவது பிரமாணத்தில் எதிர்பாராத சம்பவங்கள் நடைபெற்றால் கடைப்பிடிக்க வேண்டிய முறைகள் தொடர்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

- வாகனத்தின் சாரதி உடனடியாக வாகனத்தை நிறுத்த வேண்டும்.
- யாரேனும் நபருக்கு கடுமையான காயங்கள் ஏற்பட்டால் உடனடியாக வைத்தியசாலைக்கு கொண்டு செல்ல வேண்டும்.
- பின்னர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ய வேண்டும்.
- அந்த சந்தர்ப்பத்தில் போக்குவரத்து பொலிஸாருக்கு அறிவிக்க முடியாவிட்டால் 24 மணி நேரத்திற்குள் சம்பவம் தொடர்பில் அறிவிக்க வேண்டும்.
- வாகனத்தின் உரிமையாளர் தொடர்பில் பொலிஸார் கேட்கும் தகவல்களை கட்டாயமாக வழங்க வேண்டும். அந்த சந்தர்ப்பத்தில் காப்புறுதி சான்றிதழ், வாகன வருமான உத்தரவுப்பத்திரம் ஆகியவற்றை வழங்க முடியாது போனால் 24 மணி நேரத்தினுள் அருகிலுள்ள பொலிஸ் நிலையத்தில் கட்டாயமக ஒப்படைக்க வேண்டும்.
- எவ்வாறாயினும் விபத்தினால் ஏற்பட்ட நஷ்டங்களை ஈடு செய்வதற்காக காப்புறுதி நிலைய உத்தியோகத்தருக்கு அறிவிக்க வேண்டியுள்ளதால் அனேகமான சந்தர்ப்பத்தில் காப்புறுதியின் ஊடாக வாகனத்திற்கு ஏற்பட்ட இழப்பினை ஈடு செய்து கொள்ள முடியும்.

மேலும், நீங்கள் வீதியில் வாகனத்தை செலுத்தும் போது ஏதேனும் குற்றத்துக்காக பொலிஸாரினால் வாகனத்தை நிறுத்தும் அந்த இடத்தில் இருவர் கடமையில் இருக்க வேண்டுமென்பதுடன் வழக்கின் போது சாட்சியமளிக்க இலகுவாக இருக்குமென்பதலாகும்.

நீங்கள் வீதியில் வாகனத்தை செலுத்தும் போது தனிக்கோடுகளில் படுமாறு வாகனத்தை செலுத்தினால் அந்த இடத்திலேயே குறைந்தபட்ச தண்டப்பணமாக 1000ரூபா செலுத்த வேண்டியேற்படும். ஆனால், இரண்டு கோடுகள் காணப்படும் வீதியில் வாகனம் செலுத்தப்பட்டால் நீதிமன்றத்தின் ஊடாகவே தண்டனை வழங்கப்படும். வாகன வருமான உத்தரவுப்பத்திரம் இன்றி வாகனத்தை செலுத்தினால் தண்டப்பத்திரம் வழங்க முடியும். எனினும் நீதிமன்றத்தினால் குறைந்தபட்ச தண்டனையாக 3,000ரூபா விதிக்க முடியும். காப்புறுதி பத்திரம் இல்லையென்றால் நீதிமன்றத்தின் முன் நிறுத்தப்பட்டு குறைந்தபட்ச தண்டப்பணமாக 5,000ரூபா செலுத்த வேண்டியேற்படும். அவ்வாறே, மது அருந்திய நிலையில் வாகனத்தை செலுத்துவது கண்டறியப்பட்டால் குறைந்தபட்ச தண்டனையாக 3,500ரூபா விதிக்கப்படுவதுடன் நீதிமன்றத்தினால் சில காலங்களுக்கு சாரதி அனுமதிப்பத்திரம் இரத்து செய்யப்படலாம். எவ்வாறாயினும் யாரேனும் ஒரு நபர் தனது குற்றத்தை ஏற்றுக் கொண்டால் நீதிமன்றத்தினால் குறைந்தபட்ச தண்டனை / தண்டப்பணத்தை விதிக்க முடியுமாக இருந்தாலும் அந்தந்த நீதிமன்றங்களினால் கடைப்பிடிக்கும் முறைகளுக்கு ஏற்ப தண்டப்பணம் / தண்டனைகள் மாற்றம் பெறலாம்.

சட்டத்தரணி தினேஷ் ரத்னசேகர

## வேத(ஸ)னம்

கைக்கு கிடைக்குமென்ற அவா
மனதில் பொங்கியெழ
ஆனந்தத்துடன் கைநீட்ட முன்...
பங்குகளாக தரம்பிரித்து
பலருக்கும் பகிர்ந்தளிக்கும்
வேதனம்...

ஈ.சன்ன தயாபிரிய
அம்பலாந்தோட்டை கிளை

HNB GRAMEEN மெஹெவர
எச்.என்.பி.கிராமின் பைனான்ஸ் லிமிட்டெட் இல. 168, நாவல வீதி, நுகேகொடை
டெலி : 0112176262 பெக்ஸ் : 0112825843
ஈமெயில் :- manjula.p@hnbgrameen.lk
வெப் :- www.hnbgrameen.com
மேற்பார்வை :- சமிந்த பிரபாத் (முகாமைத்துவ பணிப்பாளர்/பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர்)
பிரதம ஆசிரியர்: மஞ்சுள பிரபாத் ஹெட்டியாராச்சி
பக்க வடிவமைப்பு: சிந்தக (அர்ஜுன கிரபிக்ஸ்)
படப்பிடிப்பு: லக்ஷ்மன் குமாரதுங்க

## Happy Birthday

நவம்பர் மாதத்தில் பிறந்த தினத்தை கொண்டாடும் எச்.என்.பி.கிராமின் சகோதர உத்தியோகத்தர்களுக்கு எமது இதயபூர்வமான வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறோம் !

| නම பெயர் | திகதி | கிளை |
|---|---|---|
| திரு. பிரதீப் குமார ஜயவர்தன | நவம்பர் 01 | நாவலப்பிட்டி |
| திரு. மொஹமட் சப்ராஸ் | நவம்பர் 01 | பொத்துவில் |
| திரு லஹிரு பிரநீத் | நவம்பர் 01 | கம்பஹா |
| திரு. சஞ்சீவ சத்துரங்க | நவம்பர் 02 | நகரக்கிளை |
| திரு. ஜே. சுயந்தன் | நவம்பர் 03 | வவுனியா |
| திரு. எம். பிரசாத் | நவம்பர் 03 | முல்லைத்தீவு |
| திரு. மதுசங்க திஸாநாயக்க | நவம்பர் 03 | மத்துகம |
| திரு. தமிந்த ரத்னாயக்க | நவம்பர் 03 | பதவிய |
| திரு. பிரசாந்த சம்பத் | நவம்பர் 03 | புத்தளம் |
| திரு. பி. திலகரத்ன | நவம்பர் 04 | நிகவரெட்டி |
| திரு. எரந்த புத்திக | நவம்பர் 04 | பொலன்னறுவை |
| திரு. சந்தருவன் ஜயரத்ன | நவம்பர் 05 | நாவலப்பிட்டி |
| திரு. நடராஜ் சுரேஸ் | நவம்பர் 05 | வவுனியா |
| திருமதி கோகிலா சஞ்சீவனி | நவம்பர் 05 | தம்புள்ளை |
| திரு. கே. பரமெஸ்வரன் | நவம்பர் 05 | நெல்லியடி |
| திரு. சிலான் அஞ்சன | நவம்பர் 05 | அம்பலாங்கொடை |
| திரு. சுதேஷ் பெரேரா | நவம்பர் 06 | தலைமையகம் |
| திரு. பிரதீப் நிஷாந்த | நவம்பர் 06 | நகரக்கிளை |
| திரு. குமார விதானகே | நவம்பர் 06 | ஹம்பாந்தோட்டை |
| திரு. ரஜித பெரேரா | நவம்பர் 06 | மொரட்டுவை |
| திரு. ரசிக சாந்த | நவம்பர் 06 | மொரவக்க |
| திரு. ஜே. நிரோஷன் | நவம்பர் 06 | வவுனியா |
| திரு. குமார ரத்னாயக்க | நவம்பர் 07 | காலி |
| திரு. சமீர சம்பத் | நவம்பர் 07 | நிகவரெட்டி |
| திரு. சமோத அனுராத | நவம்பர் 07 | நிட்டம்புவ |
| திரு. கயான் உதயலால் | நவம்பர் 07 | கம்பஹா |
| திரு. தனுக்க சத்துரங்க | நவம்பர் 08 | நகரக்கிளை |
| திரு. சமித் யசிந்த | நவம்பர் 08 | மத்துகம |
| திரு. சமில ஹர்ஷபிரிய | நவம்பர் 09 | பண்டாரகம |
| திரு. சமிந்த திஸாநாயக்க | நவம்பர் 09 | கல்கமுவ |
| திரு. அஜித்த கருணாரத்ன | நவம்பர் 09 | பொலன்னறுவை |
| திருமதி இந்துநில் குமார | நவம்பர் 09 | நிகவெரட்டி |
| திரு. எஸ் யாலகன் | நவம்பர் 09 | நெல்லியடி |
| திரு. சஜித் பிரியங்க | நவம்பர் 09 | அவிஸவாளை |
| திரு. ரந்திம மதுசங்க | நவம்பர் 09 | எம்பிலிபிட்டி |
| திரு. சந்தன குமார | நவம்பர் 10 | மத்துகம |
| திரு. சஹன் மதுரங்க | நவம்பர் 10 | நிட்டம்புவ |
| திரு. நிலந்த ரத்னாயக்க | நவம்பர் 11 | கல்கமுவ |
| திரு. சசி துமிந்த | நவம்பர் 11 | கந்தளாய் |
| திரு. என் அரவிந்தன் | நவம்பர் 11 | நெடுங்கேணி |
| திரு. சானக ஜயதிஸ்ஸ | நவம்பர் 12 | மொரட்டுவை |
| திரு. இந்திக பண்டார | நவம்பர் 12 | பொலன்னறுவை |
| திரு. சமீர பிரசங்கித் | நவம்பர் 12 | ஹோமாகம |
| திரு. சுரேஷ் சேனநாயக்க | நவம்பர் 12 | ஜாஎல |
| திருமதி நிஷானி மதுஷ்கா | நவம்பர் 13 | ஹோமாகம |
| திரு. ஏ.டி.எம். அநுருத்திக | நவம்பர் 13 | பதவிய |
| திரு. தனுஷ்க மதுரங்க | நவம்பர் 13 | மொனராகலை |
| திரு. எஸ் உலகேஸ்வரன் | நவம்பர் 13 | மட்டக்களப்பு |
| திரு. தில்ருவன் கோசல | நவம்பர் 13 | மஹியங்கனை |
| திரு. சந்தன கயான் | நவம்பர் 14 | வத்தளை |
| திரு. சானக நிரோஷன் | நவம்பர் 14 | தலைமையகம் |
| திரு. துசார திலின | நவம்பர் 15 | ஹம்பாந்தோட்டை |
| திரு. ஆர்.ஏ. பிரபாத் | நவம்பர் 15 | பொலன்னறுவை |
| திரு. சத்துரங்க மகேஷ் | நவம்பர் 15 | மதவாச்சி |
| திரு. நுவன் மதுசங்க | நவம்பர் 15 | ஹொரனை |
| திரு. ருவன் சம்பத் | நவம்பர் 15 | பண்டாரகம |
| திரு. சாரக மாதிவிலி | நவம்பர் 15 | மாத்தறை |
| திரு. மிலான் சாமிக்க | நவம்பர் 16 | அம்பலாங்கொடை |
| திரு. நிமேஷ் பெர்ணாந்து | நவம்பர் 16 | மொரட்டுவை |
| திரு. மஞ்சுள கமகே | நவம்பர் 16 | நொச்சியாகம |
| திரு. நெவில் செல்வகுமார் | நவம்பர் 16 | நுரைச்சோலை |
| திரு. அருண வசந்த | நவம்பர் 17 | தலைமையகம் |
| திரு. கே. விநாயகமூர்த்தி | நவம்பர் 17 | வவுனியா |
| திரு. கமகே நிமல்சிறி | நவம்பர் 17 | ஹம்பாந்தோட்டை |
| திருமதி. ஷானிக மதுஷானி | நவம்பர் 17 | ஹொரனை |
| திரு. கசுன் கல்ஹார | நவம்பர் 17 | களுத்துறை |
| திரு. ஜயந்த வீரசிங்க | நவம்பர் 18 | மஹியங்கனை |
| திரு. பிரதீப் ரத்னாயக்க | நவம்பர் 18 | ஹோமாகம |
| திரு. பீ. சன்கீத் | நவம்பர் 18 | அம்பாறை |
| திரு. அசான் ஜயசங்க | நவம்பர் 18 | ஹோமாகம |
| திரு. ஹசங்க மதுரங்க | நவம்பர் 18 | நகரக்கிளை |
| திரு. சமிந்த பிரதீப் | நவம்பர் 19 | எம்பிலிபிட்டி |
| திரு. சுராஜ் மருசங்க | நவம்பர் 19 | பெலியத்தை |
| திரு. சந்துரு வீரசிங்க | நவம்பர் 19 | இரத்தினபுரி |
| திரு. தர்மாசோக டி சில்வா | நவம்பர் 20 | அம்பாறை |
| திரு. மிதில் பெரேரா | நவம்பர் 20 | தலைமையகம் |
| திரு. மஞ்சுள ஹெட்டியாராச்சி | நவம்பர் 21 | தலைமையகம் |
| திரு. திலின சம்பத் | நவம்பர் 21 | பிடிகல |
| திரு. பிரதீப் தர்மசேன | நவம்பர் 22 | அம்பலாங்கொடை |
| திரு. சாராநாத் அமரசிங்க | நவம்பர் 22 | தலைமையகம் |
| திரு. தில்ஷான் லக்சித | நவம்பர் 22 | நிட்டம்புவ |
| திரு. சஞ்சய உபுல் பண்டார | நவம்பர் 23 | தலைமையகம் |
| திரு. உதார சம்பத் | நவம்பர் 23 | தம்புள்ளை |
| திரு. பிரதீப் ஏகநாயக்க | நவம்பர் 24 | கல்கமுவ |
| திரு. பெத்தும் சம்பத் குரே | நவம்பர் 25 | தலைமையகம் |
| திரு. சனத் உதார பண்டார | நவம்பர் 25 | தலைமையகம் |
| திரு. சுதத் வீரசிங்க | நவம்பர் 25 | எம்பிலிபிட்டி |
| திரு. பீ. மயூரன் | நவம்பர் 25 | கந்தளாய் |
| திருமதி. நதீஷா லக்மாலி | நவம்பர் 25 | களுத்துறை |
| திரு. பீ. ரவிவர்மன் | நவம்பர் 25 | கல்முனை |
| திரு. சுனேந்திர மதுசங்க | நவம்பர் 26 | தலைமையகம் |
| திரு. சத்துரங்க மதுசான் | நவம்பர் 26 | கடுவளை |
| திருமதி. பிரபானி வீரரத்ன | நவம்பர் 26 | தலைமையகம் |
| திரு. சத்துர நுவன் | நவம்பர் 26 | பதுளை |
| திரு. சசித் எரங்க | நவம்பர் 27 | தம்புள்ளை |
| திரு. சந்தன ரணசிங்க | நவம்பர் 28 | குரநாகலை |
| திரு. ரங்க குணசேகர | நவம்பர் 28 | பண்டாரகம |
| திரு. ஹசான் இந்திக | நவம்பர் 28 | பதுளை |
| திரு. திலின ருவன் | நவம்பர் 28 | அம்பலாங்கொடை |
| திரு. எஸ் தனுஜ | நவம்பர் 28 | வவுனியா |
| திரு. சந்துன் குமார | நவம்பர் 28 | அம்பலாங்கொடை |
| திரு. காஞ்சனா பெலிகும்புர | நவம்பர் 29 | தலைமையகம் |
| திரு. தினேஷ் வாசுல | நவம்பர் 29 | கேகாலை |
| திரு. சத்துர நதிஷான் | நவம்பர் 29 | குளியாபிட்டி |
| திரு. ரஜித பெரேரா | நவம்பர் 29 | வென்னப்புவ |
| திரு. அசேல சமுத்திக | நவம்பர் 30 | தம்புள்ள |

நிபந்தனையின்றி அன்பு செலுத்துவதை விட வேறொன்றும் இல்லை இவ்வுலகில்.